# சைவ சமய வினாவிடை



ஆக்கம்

ஜெயராஜா ஜெயமாருதி
இராமநாதபுரம் மகாவித்தியாலயம்
கிளிநொச்சி.

மாருதி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமயம்

## வினாவிடை

ஆக்கம்
ஜெயராஜா ஜெயமாருதி
இராமநாதபுரம் மகாவித்தியாலயம்
கிளிநொச்சி

மாருதி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் :- சைவசமயம் வினாவிடை

ஆசிரியர் :- ஜெ.ஜெயமாருதி

பதிப்பு :- 2008

வெளியீடு :- மாருதிவெளியீடு

கணனி வடிவமைப்பு :- இ.சுதர்சன்

அட்டைப்படம் :- கு.திலீபன்

அச்சுப்பதிப்பு :- சூரியா அச்சகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

திரு.க.முருகவேல்
அதிபர்
இராமநாதபுரம் மகாவித்தியாலம்,
கிளிநொச்சி

இந் நூலினைச் சிறந்த முறையில் உருவாக்கியிருக்கும் எமது பாடசாலை மாணவன் செல்வன் ஜெயராசா ஜெயமாருதி அவர்கள் தரம் 01 முதல் இன்றுரை எமது பாடசாலையிலே கல்வி கற்று வருகின்றார். கல்வி, கலை. விளையாட்டு எனப் பல துறைகளிலும் திறமையுடன் செயற்பட்டு வரும் இவர் ஆரம்ப வகுப்பு முதல் பல நிகழ்வுகளிலும் போட்டிகளிலும் தேசிய மட்டம் வரை பங்கு பற்றி பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை தேடித்தந்துள்ளார். அண்மையில் இந்து கலாச்சார அமைச்சினால் அறநெறிப் பாடசாலை மாணவர்கட்கு நடாத்தப்பட்ட சைவசமய பாடப் போட்டிப்பரிட்சையில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று இராமநாதபுரம் மாவடி அம்மன் அறநெறிப் பாடசாலைக்கும் எமது பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

சென்ற வருடம் "சதுரங்கம் ஓர் அறிமுகம்" என்னும் சதுரங்க விளையாட்டுப்பற்றிய ஒரு நூலினை வெளியீடு செய்து அனைவரின் பாராட்டுக்களைப் பெற்றிருந்தார். இதன் அடுத்த கட்ட முயற்சியாகவும் தனது இரண்டாவது படைப்பாகவும் தான் கற்ற தன்னிடமிருந்த சைவசமய வினாக்களைத் தொகுத்தும் புதியதாக மாணவருக்குப் பயன்படத் தக்க முறையிலே வினாவிடை நூல் ஒன்றை ஆக்கியுள்ளார்.

இன்று நாம் பல்வேறு பிரச்சனைகளுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எதிர்காலச் சந்ததியினரான மாணவர்கள் ஆற்றலும், ஆளுமையும், சிறந்த பண்புகளும் மிக்கவர்களாக வரவேண்டும். சமயக்கல்வி மூலமாகவும் அறநெறிப்பாடசாலைகளின் அறநெறி சார்ந்த கருத்துக்கள் முலமாகவும் இதனைச் சாதிக்க முடியும். அந்த வகையிலே சைவசமய மாணவர்க்கு மிகவும் பயன்படத்தக்க வகையில் அமைந்திருக்கும் இவரது முயற்சி வெற்றி பெறவேண்டும் எனவும் எதிர்காலத்தில் இன்னும் பல நூல்களை உருவாக்க வேண்டும் எனவும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு வாழவேண்டும் எனவும் எனது இதயம் நிறைந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாக்கமும் நூலாசியரும்..................

கி.சின்னராசா
பிரதிக்கல்விப்பணிப்பாளர் (நிர்வாகம்)
வலயக்கல்விப்பணிமனை,
கிளிநொச்சி.

அன்பு, கருணை, அரவணைப்பு, ஆகியவற்றினூடாக மக்களை வாழ்வாங்கு வழிவகுத்து எமது சைவசமயம் சைவத்தை தெளிவாகத் தெரிந்து கொள்ளவும் அதன் ஆழத்தையும் தெரிந்து கொள்ளப் பல வழிமுறைகள் காலம் காலமாக கையாளப்பட்டு வருவதை நாம் காணலாம். தெரிந்தவற்றையும் தெரியாதவற்றையும் வினாவிடை மூலம் தெளிய வைப்பதும் ஒரு வழிமுறையாகும்.

அந்த வகையில் செல்வன் ஜெயராஜா ஜெயமாருதி சைவத்தை நன்கறியவும் அதன் மகிமையை விளக்கும் நோக்கிலும் சிறியவர்களுக்குக் கற்கக் கூடிய வகையில் ஒரு வினாவிடைத் தொகுப்பை ஆக்கியமை ஒரு சிறந்த முயற்சியாகும்.

நீண்ட வரலாறு கொண்ட சைவத் தமிழ் மரபில் உதித்த செல்வன் ஜெயமாருதி பள்ளிச் செயற்பாட்டில் பல துறைகளிலும் சாதனை படைத்தவர். அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்காக அகில இலங்கை மட்டத்தில் வருடா வருடம் நடாத்தப்பட்டு வரும் பரீட்சையில் 2007ம் ஆண்டில் 9ம் வகுப்புப்பரீட்சையில் (மேற்பிரிவில்) தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றவர். மாவடி அம்மன் அறநெறிப்பாடசாலையில் கற்றுச் சாதனை படைத்ததால் அவ் அறநெறிப்பாடசாலையும் தேசிய மட்டப் பெருமையைப் பெற்றுள்ளது.

ஜெயமாருதி சமயப்பணியுடன் பள்ளிப் பணிகளிலும் சாதனை படைத்த சாதனையாளன். பிஞ்சுவயதிலே தனக்கென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமான மூளைக்கு வேலை கொடுக்கும் சதுரங்க விளையாட்டைக் கற்று தெளிந்தவர். தர்ன் மட்டுமல்ல தன் வயதொத்தவர்களும் அதனை அறியவேண்டுமென்ற பேராவலால் அது சார்ந்த நூல் ஒன்றை ஆக்கி வெளியிட்டுள்ளார்.

சக நண்பர்களுக்கு நல்வழி காட்டி சமூகச் செயற்பாட்டிலும் தனது நண்பர்களைக் இணைத்துச் செயற்படும் ஆற்றலும் தலைமைத்துவப் பண்பும் கொண்டவர்.

சிறிவயதிலேயே இச் சிறந்த ஆக்கத்தைச் செய்து வரம் இவரது ஆக்க முயற்சி எமது சமூகத்திற்கு ஒர வரப்பிரசாதமாகும். இவரது பல வேறுபட்ட இம் முயற்சிகள் மென்மேலும் தொடரும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்ட திருநெறிக்கழகத்தின் விதப்புரை

கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலை மாணவரின் சைநெறி அறிவை வளர்க்கும் நன்னோக்கில் வெளியிடப்படும் வினா விடை நூல் மிகவும் சிறந்த பயனுள்ள முயற்சியாகும்.

எமது மாணவரின் சமயக்கல்வி தற்போது உள்ள சிக்கலான சூழலில் நலிவடையாது காப்பாற்றும் பணியில் மாருதி வெளியீட்டு நிறுவனம் சேவை மனப்பான்மையுடன் ஈடுபட்டுள்ளமை போற்றக்கூடிய செயலாகும்.

இந்நூலில் வினாக்களும் விடைகளும் மாணவரின் பாடத்திட்ட நூலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளமையால் பரீட்சைகளுக்கு கைநூலாகவும் இது விளங்குகின்றது. இதனால் ஆரம்பப்பிரிவு மாணவர் தொடக்கம் மேற்பிரிவு மாணவர் வரை பயன்பெறுவர்.

மிகவும் ஆர்வத்துடன் இந்நூலைத் தொகுத்த செல்வன்.ஜெ.ஜெயமாருதியின் முயற்சிக்கு எமது பாராட்டு உரியதாகும்.

நீண்ட காலம் மாணவரின் சமயக்கல்விக்குப் பரீட்சைகள் நடாத்தி ஊக்கப்படுத்தி வரும் திருநெறிக்கழகம் இப்படியான வெளியீட்டு நூல்களை மகிழ்ச்சியோடு வரவேற்பதுடன் மாணவர் ஆசிரியர் அனைவரும் இந்நூலை வாங்கிப் பயன்பெற வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றது.

நன்றி

திரு.வெ.மகாலிங்கம்
தலைவர்
திருநெறிக்கழகம்
கிளிநொச்சி மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி

திரு.த.ஸ்ரீஸ்கந்தராசா
கலாச்சார உத்தியோகத்தர்
மாவட்டச் செயலகம்
கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டத்தில் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் வட்டக்கச்சிக் கிராமத்தில் ஜெயராஜா சந்திரமதி அவர்களின் செல்வப் புதல்வனாக வந்துதித்தவரே ஜெயமாருதி ஆவார். ஞானப்பால் உண்ட சம்பந்தரைப் போன்று சிறந்த கடவுள் பக்தியும் சைவத்திறனும் உடையவர்.

செல்வன்.ஜெ.ஜெயமாருதி சைவச்சிறார்களுடைய சமய அறிவினை துலக்கும் முகமாக சைவசமய வினாவிடை என்கிற நூலினைத் தொகுத்துள்ளார். இவர் சமய அறிவுடையவராகத் திகழ்வதோடு மட்டுமல்லாமல் பொது அறிவுப் போட்டிகளிலும் சிறந்து விளங்குகிறார். உண்மையிலேயே வயதில் குறைந்தவராக இருப்பினும் அவருடைய ஆளுமை எல்லோரும் வியக்கத்தக்கதாகவே உள்ளது.

இந்த சமய கலாச்சார திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட அகில இலங்கை சமய பொது அறிவு எழுத்துப் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்று எமக்கும் எமது மாவட்டத்திற்கும் பெருமை தேடித் தந்துள்ளனர். செல்வன்.ஜெ்ஜெயமாருதியுடைய நூல் வெளியிடும் அரிய செயற்பாட்டினை உளமார வாழ்த்துவதோடு இவர் மென்மேலும் பல நூல்களை வெளியிட வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன். இவர் சகல சௌபாக்கியங்களும் பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

"வாழ்க வளர்க"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

உலகின் மிகப் புரதானமானதும் சிறப்பானதுமாக விளங்குவது எமது சைவ சமயம். வேறெந்த சமயங்களிலும் இல்லாத வகையில் மண்ணுலகில் மனிதன் வாழ வேண்டிய அனைத்து, வழிகளையும் வகுத்துக் கூறி மனிதனைத் தெய்வமாக்கி எல்லா உயிர்களிலும் கடவுளைக் காணச் செய்யும் வல்லமை மிக்கது.

இவ்வாறு செழிப்புடனும், சிறப்புடனும் நிலவி வந்த சைவ சமயம் பல்வேறு காரணங்களினால் வீழ்ச்சியடைந்து இன்றுள்ள நிலையை அடைந்துள்ளது. இந்நிலை மாறி மீண்டும் சைவ நெறி தழைத்தோங்க வேண்டுமெனில் எதிர்காலத்தில் பெரியவர்களாகப் போகும் சைவ மாணவர்களிற்கு சமய அறிவையும் சமயப் பற்றையும் வளர்ப்பது மிகமிக அவசியமாகும்.

இதை உணர்ந்த பலரும் இன்று சைவ மாணவர்கள் மத்தியிலே சமயவினாவிடைப் போட்டிகள் சமயப்போட்டிப்பரிட்சைகள் அறநெறிப்பாடசாலை வகுப்புக்கள் என்பவற்றை நடாத்தி மாணவர்களிடையே சமய அறிவை வளர்க்கும் முயற்சயில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறான போட்டிகளில் பங்குபற்றும் பாடசாலை மற்றும் அறநெறி பாடசாலை மாணவர்கள் தங்களைத் தயார் படுத்தும் முகமாகவும் தமது சமய அறிவை வளர்க்கும் முகமாகவும் கற்கக் கூடிய வகையில் என்னிடம் இருந்த வினாக்களைத் தொகுத்தும் புதியதாக பல வினாக்களைத் திரட்டியும் அனைவருக்கும் விளங்கும் வகையில் சிறு சிறு தலைப்புக்களின் கீழே இந்நூலை உருவாக்கியுள்ளேன்.

சைவ மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் எனது அனுபவம் மற்றும் கல்வி அறிவுகளையும் பெரியோர்களின் அறிவுரைகளையும் துணையாகக் கொண்டு பரந்தநோக்கோடு ஆக்கப்பட்ட இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய எமது கல்லூரி அதிபர் மதிப்பிற்குரிய திரு.க.முருகவேல் அவர்களிற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இவ்வாறு ஒரு நூல்லுருவாக்கம் பற்றிக் குறிப்பிடும்போது அதனை வரவேற்று, நூல் உருவாக்கம் பற்றிய அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் குறிப்பிட்டு மேலதிகமான சில வினாக்களையும் தந்துதவி இந் நூலுக்கு விதப்புரை ஒன்றையும் வழங்கிய கிளிநொச்சி மாவட்ட திருநெறிக் கழக தலைவர் மதிப்பிற்குரிய திரு.வெ.மகாலிங்கம் அவர்கட்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனது நூலுருவாக்கத்தின் போது அறிவுரைகள் வழங்கியதுடன் நூலாக்கமும் நூலாசிரியரும் என்னும் பகுதியில் என்னை அறிமுகப்படுத்திய மதிப்பிற்குரிய பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு.கி.சின்னராசா அவர்கட்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் வாழ்த்துரை வழங்கிய கிளிநொச்சி மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் மதிப்பிற்குரிய திரு.த.ஸ்ரீஸ்கந்தராசா அவர்கட்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் சிறந்த முறையில் உருவாகி வெளிவர ஆக்கமும் ஊக்கமும் அளித்த அனைத்து அன்பு உள்ளங்களிற்கும் எனது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் எல்லாவழிகளிலும் எனக்கு உதவிகளும் ஒத்தாசைகளும் வழங்கியவர்களுக்கு இனிய நன்றிகளைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

செல்வன் ஜெயராஜா ஜெயமாருதி
இராமநாதபுரம் மகாவித்தியாலயம்
கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| அத்தியாயம் | பக்கம் |
| --- | --- |
| 01. விநாயகர் | 12 |
| 02. சிவபெருமான் | 16 |
| 03. முருகன் | 23 |
| 04. சக்தி | 30 |
| 05. திருமால் | 34 |
| 06. கிராமியத் தெய்வங்கள் | 37 |
| 07. சிவ சின்னங்கள் | 38 |
| 08. ஆலய வழிபாடும் ஆலய அமைப்பும் | 44 |
| 09. புகழ் பெற்ற ஈழத்துக் கோவில்கள் | 52 |
| 10. பன்னிரு திருமுறைகள் | 59 |
| 11. சைவசித்தாந்தம் | 67 |
| 12. சைவநாற்பாதங்கள் | 72 |
| 13. சமயகுரவர்கள் | 74 |
| 14. வேதங்கள் | 92 |
| 15. சைவ ஆகமங்கள் | 97 |
| 16. முப்பொருள்கள் | 99 |
| 17. பொதுவானவை | 103 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01. விநாயகர்

01. **முதல் வணக்கத்துக்குரிய கடவுள் யார்?**
பிள்ளையார்.

02. **நாம் எக்காரியத்தையும் தொடங்க முன்னர் யாரை வணங்க வேண்டும்.?**
விநாயகப் பெருமானை

03. **விநாயகப் பெருமானின் வாகனம் எது?**
பெருச்சாளி (எலி)

04. **விநாயகப் பெருமான் எதன் வடிவானவர்?**
ஓம் என்னும் பிரணவ வடிவானவர்

05. **சிவபெருமானின் மூத்த திருக்குமாரன் யார்?**
விநாயகர்

06. **விநாயகரால் சங்காரம் செய்யப்பட்ட அசுரன் யார்?**
கஜமுகாசுரன்

07. **சந்திரனைத் தேயும்படி சாபமிட்டவர் யார்?**
விநாயகர்

08. **விநாயகரின் மறு பெயர்கள் என்ன?**
பிள்ளையார், கணபதி, ஆனை முகன், ஐங்கரன், விக்னேஸ்வரன், வேழமுகத்தவன், தொப்பை அப்பன்.

09. **விநாயகர் என்பதன் பொருள் யாது?**
தனக்கு மேலே தலைவன் இல்லாதவன் என்று பொருள்

10. **கணபதி என்பதன் பொருள் யாது?**
பூதகணங்களுக்குத் தலைவன் எனப் பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11. பிள்ளையார் எனப் பொருள்வரக் காரணம் யாது?**
இறைவனது பிள்ளை என்பதால்

**12. விக்னேஸ்வரன் என்பதன் பொருள் யாது?**
விக்கினங்களைத் தீர்ப்பவன் எனப் பொருள்

**13. விநாயகருக்கு மிகப்பிரியமான அர்ச்சனைப் பொருள் யாது?**
அறுகம்புல்

**14. விநாயகருக்குப் பொருத்தமான நைவேத்தியப் பொருட்கள் கூறுக?**
கடலை, மோதகம், அவல், எள்ளுருண்டை, அப்பம்

**15. சுயம்பு மூர்த்தி பொல்லாப்பிள்ளையார் என்பதன் அர்த்தம் யாது?**
உளி முதலியவற்றால் போழ்ந்து செய்யப்படாதவர் சுயம்.பு மூர்த்தி என்பத்ன் கருத்தாகும். தற்போது பொல்லாப்பிள்ளையார் என மருவி நிற்கின்றது.

**16. விநாயகரால் நம்பிக்கு உபதேசிக்கப்பட்ட நூல் எது?**
திருத்தொண்டர் திருவந்தாதி

**17. விநாயகருக்குரிய முக்கியமான விரதங்கள் எவை?**
விநாயகசட்டி, விநாயக சதுர்த்தி

**18. விநாயகரின் அருள் பெற்ற பெரியோர்கள் யாவர்?**
ஔவையார், நம்பியாண்டார் நம்பி

**19. பிள்ளையார் பிடிக்கப் பயன்படும் பொருட்கள் எவை?**
சாணம், திருநீறு, சந்தனம், மஞ்சள் மா, சோறு(அன்னம்) அறுகம் புல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. வீடுகளில் சுவாமி அறையில் பிள்ளையார் படம் எங்கே வைக்கப்படல் வேண்டும்?
வணங்குபவரின் இடது பக்கத்தில் முதலாவதாக வைக்கப்படல் வேண்டும்.

21. துங்கக்கரிமுகத்துத் தூமணி................. என விநாயகரைத்துதிப்பவர் யார்?
ஔவையார்

22. வெவ்வினையை வேரறுக்க வல்லவன் யார்?
விநாயகர்

23. சித்தியைத் தருபவர் யார்?
விநாயகர்

24. நாம் எழுதத் தொடங்கமுன்னர் இட வேண்டியது எது?
பிள்ளையார் சுழி

25. பிள்ளையார் சுழி என்பது என்ன?
ஓம் என்னும் சொல்லினைக் குறிக்கும் வடிவம்.

26. யாரை வணங்கினால் வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் என ஔவையார் கூறுகின்றார்?
விநாயகரை

27. விநாயகனே வெவ்வினையை வேரறுக்க ........ எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர் யார்?
கபில தேவர் (மூத்த நாயனார் திருவிரட்டை மணி மாலை)

28. நம்பி அருள் பெற்ற பொல்லாப் பிள்ளையார் ஆலயம் எங்கு உள்ளது?
திருநாரையூரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. ஓம் ஓங்கார ரூபாய நம என்பதன் பொருள் என்ன?
ஓம் என்னும் பிரணவப் பொருளாய் அமைபவரும் ஐந்து கைகளை உடையவருமான விநாயகப் பெருமானுக்கு வணக்கம் என்பதாகும்.

30. சைவ சமயத்திலுள்ள எல்லா மந்திரங்களுக்கும் ஆதியாய் அமையும் மந்திரம் எது?
ஓம் என்னும் மந்திரம்

31. மூன்று முறை தலையில் குட்டி யாரை வணங்க வேண்டும்?
பிள்ளையாரை

32. கபிலதேவர், மூத்தநாயனார் என்று யாரைக் குறிப்பிடுகின்றார்?
விநாயகரை

33. சிவகுமாரர் என்று அழைக்கப்படுபவர் யார்? ஏன்?
விநாயகர், சிவபெருமானது சக்தி அம்சமாகத் தோன்றியதால்.

34. விநாயகரால் எழுதப்பட்ட இதிகாசம் எது?
மகாபாரதம்

35. விநாயகரின் தலைக்குச் சொந்தமான யானையின் பெயர் என்ன?
கஜேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02.சிவபெருமான்

01. சைவசமய முழுமுதற் கடவுள் யார்?
சிவபெருமான்

02. கங்கையைச் சடாமுடியில் வைத்திருப்பவர் யார்?
சிவபெருமான்

03. சங்கரன் என்னும் பெயர் எக்கடவுளைக் குறிக்கும்?
சிவபெருமானை

04. சங்கரன் என்பதன் கருத்து யாது?
சுகத்தைத் தருபவன்

05. சிவபெருமானின் சக்தியின் பெயர் என்ன?
உமையம்மை

06. பிட்டு விற்ற வந்திக்கிழவிக்குரிய வேறு ஒரு பெயர் தருக?
செம்மணச் செல்வி

07. மதுரையில் உள்ள ஆற்றின் பெயர் யாது?
வைகை ஆறு

08. பிட்டுக்கு மண் சுமக்கும் கூலியாளாக வந்தவர் யார்?
சிவபெருமான்

09. அனலுருவாக நின்றவர் யார்?
சிவபெருமான்

10. சிவன் அனலுருவத்தோடு தொடர்புடைய விரதம் எது?
சிவராத்திரி விரதம்

11. சிவனைச் சூழ்ந்து வரும் படைக்கு என்ன பெயர்?
பூதகணங்கள்

12. சிவபெருமானின் திருக்குமாரர்கள் யாவர்?
பிள்ளையார், முருகன், வீரபத்திரர், வைரவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. யாகத்தின் உருவமாக விளங்குபவர் யார்?
சிவபெருமான்

14. அதிகாலையில் இறைவனைத் துயில் எழுப்பும் பாடலின் பெயர் என்ன?
திருப்பள்ளி எழுச்சி

15. சுடுகாட்டுச் சாம்பலை உடல் எங்கும் பூசிக் காணப்படும் கடவுள் யார்?
சிவபெருமான்

16. சிவன் பூசியிருப்பதும், பூண்டிருப்பதும் எது என மணிவாசகர் கூறுகின்றார்.?
பூசியிருப்பது - திருநீறு
பூண்டிருப்பது - சீறுகின்ற பாம்பு

17. முப்புரங்களை எரித்தவர் யார்?
சிவபெருமான்

18. முப்புர அசுரர்கள் யார்?
தாரகாக்கன், கமலாக்கன், வித்தியுன்மாலி

19. அர்த்தநாரீஸ்வரர் வடிவம் எவ்வகையானது?
சிவன் அரைப்பங்காகவும், உமை அரைப்பாங்காகவும் இணைந்த வடிவம்.

20. முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை வழிபடும் சமயம் எது?
சைவசமயம்

21. சோமாஸ்கந்த மூர்த்தியின் நடுவில் அமர்ந்திருப்பவர் யார்?
முருகன்

22. கடவுளின் இயல்புகள் எவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் உள்ளவர், எல்லாம் வல்லவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர்.

23. நஞ்சைக் கண்டத்தே வைத்திருப்பவர் யார்?
சிவபெருமான்

24. சிவபெருமானின் சடையில் உள்ளவை யாவை?
கங்கை, பிறை

25. சிவபெருமானின் வாகனம் எது?
நந்தி இடபம்

26. ஐந்தொழில்களை நிகழ்த்தும் சிவபெருமானின் வடிவம் எது?
நடராஜவடிவம்

27. அழித்தல் தொழில் புரிபவர் யார்?
உருத்திரர்

28. கொன்றை மாலையை அணிந்தவர் யார்?
சிவபெருமான்

29. சிவனின் கொடி எது?
நந்திக்கொடி

30. இறைவன் விரும்பும் வழிபாடு யாது?
எல்லா உயிர்கள் மீதும் அன்பு செலுத்துதல்

31. கைலாயத்தில் வாயிற்காவலராகப் பதவி வகிப்பவர் யார்.?
திருநந்தி தேவர்

32. பூதப்படை சூழ வருபவர் யார்?
சிவபெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. திருவாசகத்தை மாணிக்கவாசகர் சொல்ல ஏட்டில் எழுதியவர் யார்?
சிவபெருமான்

34. சிவபெருமானின் முகங்கள் எத்தனை?
ஐந்து

35. திரிபுராரி என சிவபெருமான் ஏன் அழைக்கப்பட்டார்?
முப்புரங்களை எரித்தமையால்

36. திரிபுரம் எரிக்கப் புறப்பட்ட சிவனின் தேர் எது?
பூமி

37. திரிபுரம் எரிக்கப் புறப்பட்ட சிவனின் வில்லாக விளங்கியது எது?
மேருமலை

38. தக்கனின் சிரம் கொய்த தலம் யாது?
திருப்பறியலூர்

39. சிவ சிவ என்று கூறாதவர் யார்?
தீவினையாளர்

40. நடராஜப் பெருமான் ஆனந்தக் கூத்தாடும் தலத்துக்கு என்ன பெயர்?
தில்லை அல்லது சிதம்பரம்

41. சிவபெருமான் இயமனை உதைத்தமை யாரைக் காப்பாற்றச் செய்யப்பட்டது?
மார்க்கண்டேயரை

42. சிவனை முழுமுதற் கடவுள் என்று உணர்த்தும் மூர்த்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது?
இலிங்கோற்பவ மூர்த்தம்

43. ஆலமர் செல்வன் என அழைக்கப்படுபவர் யார்?
சிவபெருமான்

44. நடராஜப் பெருமான் மதுரையில் ஊன்றி ஆடும் பாதம் எது?
இடது பாதம் (தூக்கி ஆடுவது) வலது பாதம் (ஊன்றியிருப்பது)

45. பஞ்ச சபைகளும் எவை?
தாமிரசபை, சித்திரசபை, இரத்தின சபை, பொற்சபை, வெள்ளி சபை.

46. சிவன் என்ற சொல்லின் பொருள் யாது?
மங்கலமானவன் என்பது

47. இறைவன்மதுரையில் எத்தனை திருவிளையாடல்களைச் செய்தருளினார்?
அறுபத்து நான்கு

48. சுந்தரரைத் திருமணப்பந்தலில் தடுத்தாட்கொண்டவர் யார்?
சிவபெருமான்

49. இடபவாகனத்தில் காட்சியளிப்பவர் யார்?
சிவபெருமான்

50. திரிபுரம் என்பதை திருமூலர் எவை எனக் குறிப்பிடுகின்றார்?
மும்மலங்கள் என

51. பஞ்ச சபைகள் ஒவ்வொன்றும் அழைக்கப்படும் தலங்கள் எவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சித்திர சபை | - | திருக்குற்றாலம் |
| தாமிர சபை | - | திருநெல்வேலி |
| இரத்தின சபை | - | திருவாலங்காடு |
| பொற்சபை | - | தில்லை |
| வெள்ளி சபை | - | மதுரை |

52. **இறைவனும் இறைவியும் திருமணம் செய்த நாளாகப் போற்றப்படும் நாள் எது?**
பங்குனி உத்தரம்

53 **நடராஜப்பெருமானின் சிவதாண்டவத்தைக் கண்டவர்கள் எனச் சிறப்புடையவர் யார்?**
வியாக்கிரமபாதர், பதஞ்சலிமுனிவர்

54. **செங்கமலத் திருப்பாதம் என்பதன் என்பதன் பொருள் யாது?**
சிவப்புத் தாமரை போல் பாதங்களை உடைய இறைவன்

55. **மாலும் அயனும் காணாத அரியவராக விளங்கியவர் யார்?**
சிவபெருமான்

56. **யாகத்தின் உருவமாக விளங்குபவர் யார்?**
சிவபெருமான்

57. **லிங்கம் என்பதன் பொருள் யாது?**
“லிங்” என்பது லயம் அல்லது அடங்குதல் எனவும் “கம்” தோன்றுதல் எனவும் பொருள் படும். உலகின் தோற்ற ஒடுக்கத்தைக் குறித்து நிற்கும் குறி என்பதாகும்.

58. **மழுவைக் கையில் வைத்திருக்கும் கடவுள் யார்?**
சிவபெருமான்

59. **பிறவாயாக்கைப் பெரியோனாக விளங்குபவர் யார்?**
சிவபெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60. உலகெலாமுணர்ந்து ஓதற்கரியவன்............ எனக்குறிப்பிடப் படுபவர் யார்?
சிவபெருமான்

61. சிவனின் திருக்குமாரர்கள் யாவர்?
பிள்ளையார், முருகன், வைரவர், வீரபத்திரர், ஐயனார்

62. சிவ விரதங்கள் எவை?
சிவராத்திரி விரதம், கேதாரகௌரி விரதம், பிரதோஷவிரதம், மார்கழி திருவாதிரை விரதம், கல்யாண சுந்தர விரதம், சூல விரதம், இடப விரதம்.

63. சிவமூர்த்தங்கள் எத்தனை?
அறுபத்து நான்கு

### முருகனுக்குரிய நைவேத்தியங்கள்

| | | |
|---|---|---|
| திங்கட்கிழமை | - | வெண்பொங்கல் |
| செவ்வாய்க்கிழம | - | எலுமிச்சை சாதம் |
| புதன் கிழம | - | வெள்ளை உளுத்தம் பருப்பு சாதம் அல்லது தோல் நீங்காத பச்சைப் பருப்பு பாயாசம் |
| வியாழக்கிழமை | - | தயிர்சாதம் |
| வெள்ளிக்கிழமை | - | கற்கண்டு சாதம் அல்லது சக்கரைப் பொங்கல் |
| சனிக்கிழமை | - | சாம்பார் சாதம் |
| ஞாயிற்றுக்கிழமை | - | தேங்காய் சாதம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03. முருகன்

01. முருகன் எங்கு தோன்றினார்?
சரவணப்பொய்கையில்

02. முருகனுக்குரிய வேறு பெயர்கள் தருக?
காங்கேயன், கார்த்திகேயன், ஆறுமுகன், வேலன், சரவணபவன்

03. முருகனுக்குரிய இரண்டு விரதங்கள் தருக?
வெள்ளிக்கிழமை விரதம், கந்தசஷ்டி விரதம்

04. முருகனுக்குச் சரவணபவன் என்னும் பெயர் ஏன் ஏற்பட்டது?
சரவணப்பொய்கையில் தோன்றியதால்

05. சூரபத்மனைச் சங்காரம் செய்தவர் யார்?
முருகப்பெருமான்

06. சூரபத்மனின் சகோதரர்களின் பெயர்களைத் தருக?
தாரகாசுரன், சிங்கமுகாசுரன்

07. சேவலும் மயிலுமாக மாறியவன் யார்?
சூரபத்மன்

08. அழகுத் தெய்வம் என அழைக்கப்படும் தெய்வம் யார்?
முருகப்பெருமான்

09. முருகனது கொடி எது?
சேவற் கொடி

10. முருகனது வாகனங்கள் எவை?
மயில், ஆட்டுக்கடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. **கந்தஷட்டி விரதங்கள் எத்தனை நாட்கள் அனுஷ்டிக்கப்படும்?**
ஆறு நாட்கள்.

12. **சூரசங்காரம் எதனைக் குறிப்பிடுகின்றது?**
சூரனை அடக்கிய தினத்தை

13. **கந்தரநுபூதி என்னும் நூலை எழுதியவர் யார்?**
அருணகிரிநாதர்

14. **முருகனின் கையில் உள்ள வேல் எதனைக் குறிக்கும்?**
ஞானத்தைக் குறிக்கும்

15.. **கந்தரலங்காரம் பாடியது யார்?**
அருணகிரிநாதர்

16. **பழியைப் போக்குவதற்கு துணையாவது எது?**
முருகனின் பன்னிரு தோள்கள்

17. **மயூரம் என்பது என்ன?**
மயில்

18. **மொழிக்கு, விழிக்குத் துணையாவன எவை?**
மொழிக்குத் துணை - முருகனின் நாமங்கள்
விழிக்குத் துணை - முருகனின் பாதங்கள்

19. **முருகப் பெருமானின் சக்திகள் யாவர்?**
வள்ளி தெய்வானை (இச்சா சக்தி, கிரியா சக்தி)

20. **சிவபெருமானின் நெற்றிக்கண்ணில் இருந்து தோன்றியது யார்?**
முருகப்பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. ஆறு தீப்பொறிகள் எவ்வாறு மாற்றம் பெற்றன?
ஆறு குழந்தைகளாக.

22. கார்த்திகேயன் என்னும் பெயர் முருகனுக்கு ஏன் ஏற்பட்டது?
கார்த்திகைப் பெண்களினால் வளர்க்கப்பட்டமையால்

23. முருகனின் பிறப்பு வரலாற்றைக் குறிப்பிடும் தமிழ் நூல் எது?
கந்தபுராணம்

24. கந்தபுராணம் யாரால் எழுதப்பட்டது?
கச்சியப்ப சிவாச்சாரியாரால்

25. சிவனுக்குக் குருவாக வந்தவர் யார்? இதனால் அவருக்கு ஏற்பட்ட பெயர் யாது?
குருவாக வந்தவர் - முருகப்பெருமான்
ஏற்பட்ட பெயர் - சுவாமிநாதன், சிவகுரு

26. திருமாலின் புதல்வியாரை மணந்தவர் யார்?
முருகப்பெருமான்

27. திருமாலின் புதல்வியான அமுதவல்லியாகத் திகழ்ந்தவர் யார்?
தெய்வானை

28. திருமாலின் புதல்வியான சுந்தரவல்லியாக விளங்கியவர் யார்?
வள்ளி

29. பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன் என்ற கூற்று இடம் பெறும் நூல் எது?
வெற்றிவேற்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. திருப்புகழ் பாடியவர் யார்?
அருணகிரிநாதர்

31. சூரபத்மனின் இறுதித்தோற்றம் யாது?
சேவலும் மயிலும்

32. கந்தஷட்டி விரதம் அனுட்டிக்கப்படும் காலம் யாது?
ஐப்பசி மாதப் பூர்வபக்க பிரதமை முதல் ஷட்டி வரை உள்ள ஆறு நாட்கள் அனுட்டிக்கப்படும்.

33. திருவகுப்பு என்னும் நூல் யாரால் பாடப்பட்டது?
அருணகிரிநாதரால்

34. குறிஞ்சி நிலக்கடவுள் யார்?
முருகப் பெருமான்

35. சைவ ஆலயங்களில் நந்தி வீற்றிருப்பது போல முருகன் ஆலயங்களில் வீற்றிருப்பது எது?
மயில்

36. வேல் விருத்தம் என்னும் நூலை இயற்றியவர் யார்?
அருணகிரிநாதர்

37. அன்னதானக் கந்தன், அபிடேகக்கந்தன், கற்பூரக்கந்தன், அலங்காரக் கந்தன், என அழைக்கப்படும் திருத்தலங்கள் இலங்கையில் எவை?
அன்னதானக்கந்தன் - செல்வச் சந்நிதி ஆலயம்
அபிடேகக் கந்தன் - மாவிட்ட புரம் கந்தசாமி ஆலயம்
கற்பூரக் கந்தன் - கதிர்காமம் முருகன் ஆலயம்
அலங்காரக் கந்தன் - நல்லூர் முருகன் ஆலயம்

38. முருகனுக்கு எத்தனை கைகள்?
பன்னிரெண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. குறமாதைப் புணர்வோன் எனப் புகழப்படுவோன் யார்?
முருகன்

41. செய்நன்றி மறந்ததால் ஏற்படும் தீமையைக் கூறும் புராணம் எது?
கந்தபுராணம்

42. முருகனின் படை வீடுகள் எத்தனை? எவை?

| | | | |
|---|---|---|---|
| i. | பழநி | - | திருவாவினன்குடி |
| ii. | சுவாமி மலை | - | திருவேரகம் |
| iii. | பழமுதிர்ச்சோலை | - | அழகர் கோவில் |
| iv. | திருப்பரங்குன்றம் | - | |
| v. | திருத்தணிகை | - | குன்று தோறாடல் |
| vi. | திருச்செந்தூர் | - | திருச்சீரலை வாய் |

43. முருகனுக்கு மாவிளக்கு எதனைக் கொண்டு ஏற்றுவர்?
தேனும் திணைமாவும்

44. திருப்புகழ் யாரைப் புகழ்ந்து பாடப்படும்?
முருகனை

45. சிவபெருமானுக்கு முருகன் உபதேசித்த மந்திரம் யாது?
பிரணவமந்திரப் பொருள்

46. கறையானுக்கு இளையோனாக விளங்குபவர் யார்?
முருகன்

47. வெள்ளிக்கிழமையைச் சிறப்பித்துக் கூறும் புராணம் எது?
கந்தபுராணம்

48. வெள்ளிக்கிழமை விரதங்களில் எவ் மாதத்திற்குரிய வெள்ளிக்கிழமை சிறந்ததாகும்?
ஐப்பசி மாத வெள்ளிக்கிழமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. அசுரர்களின் தலைவனாக விளங்கியவன் யார்?
சூரன்

50. தேவாரத்துக்குப் பண் போல திருப்புகழுக்கு சிறப்பு எது?
சந்தம்

51. தேவசேனாதிபதியாக விளங்கியவர் யார்?
முருகப் பெருமான்

52. முருகப் பெருமான் அருனகிரிநாதருக்கு அளித்த தீட்சையின் பெயர் யாது?
திருவடி தீட்சை

53. திருப்புகழில் முருகன் முதன்முதலில் அடியெடுத்துக் கொடுத்த பகுதியாது?
முத்தைத்தரு.......

54. மாயனின் மருகோன் எனப் புகழ்படுபவர் யார்?
முருகப் பெருமான்

55. சூரபத்மனின் தந்தை யார்?
காசிபமுனிவர்

56. முருகனின் ஞான சக்தியாது?
வேல்

57. முருகனின் மயில் எத்தொழிலுக்குரியாதாகும்?
காத்தல் தொழிலுக்கு

58. கலியுகவரதனாக விளங்கும் தெய்வம் எது?
முருகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

59. மருவும் அடியார்கள் மனதில் விளையாடுபவன் யார்?
முருகன்

60. வெவ்வினை என்பதன் கருத்து யாது?
கொடிய வினை (ஆணவம்)

61. ஏடு எழுத எளியேன் எவ்வாறு பாடுவேன் என முருகனிடம் கூறியவர் யார்?
அருணகிரிநாதர்

62. கந்தபுராணத்தில் பிள்ளையார் வணக்கமாக அமைந்த பாடல் எது?
மண்ணுலகத்தினிற் பிறவி மாசற..........

63. சிற்ப சாத்திர விதிப்படி சுப்பிர மணிய மூர்த்தம் எத்தனை?
பதினேழு

64. மௌனபூசை நடைபெறும் முருகன் ஆலயங்கள் எவை?
கதிர்காமம், செல்வச்சந்நிதி, மண்டூர் முருகன் கோவில்

65. முருகனால் சிறையில் அடைக்கப்பட்டவர் யார்?
பிரம்மதேவன்

66. இந்தியாவில் பன்னிரு வேளை பூசை நடைபெறும் முருகன் ஆலயம் எது?
திருச்செந்தூர்

67. இலங்கையில் ஆறு காலப் பூசை நேரம் தவறாது குறித்த வேளையில் இடம் பெறும் முருகன் ஆலயம் எது?
நல்லூர் கந்தசுவாமி கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04. சக்தி

**01. சக்தி என்பது என்ன?**
ஆற்றல் அல்லது வல்லமை என்பதாகும்

**02. சிவபெருமானின் சக்தி யார்?**
உமையம்மை

**03. முருகப் பெருமானின் சக்திகள் யார்?**
தெய்வானை, வள்ளி

**04. விஷ்ணுவின் சக்தி யார்?**
மகாஇலக்குமி

**05. சக்தி விரதங்கள் எவை?**
நவராத்திரி விரதம், வரலக்ஷ்மிவிரதம், ஆனி உத்தர விரதம்

**06. நவராத்திரி எத்தனை நாட்கள் அனுஷ்டிக்கப்படும்? எவ்வாறு?**
முதல் மூன்று நாட்கள் துர்க்கையையும்
அடுத்த மூன்று நாட்கள் இலக்குமியையும்
இறுதி மூன்று நாட்கள் சரஸ்வதியையும் வழிபடுவர்

**07. நவராத்திரி விழா கொண்டாடப்படும் மாதம் எது?**
புர்ட்டாதி மாதம்

**08. நவராத்திரியின் இறுதிநாள் கொண்டாடப்படும் விழா எது?**
விஜயதசமி

**09. கலைகள் எத்தனை?**
64 அறுபத்துநான்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. சரஸ்வதியின் கையில் உள்ள வாத்தியம் எது?
வீணை

11. சரஸ்வதிக்குரிய மறு பெயர்கள் மூன்று தருக?
கலைவாணி, நாமகள், கலைமகள்

12. வெள்ளைக்கமலத்தே வீற்றிருப்பவள் யார்?
சரஸ்வதி

13. பூங்குழலாள் என்பது எந்தத் தெய்வத்தைக் குறிக்கும்?
அபிராமியை

14. பூங்குழலாள் என்பதன் பொருள் என்ன?
பூச்சூடிய கூந்தலை உடையவள்

15. சரஸ்வதி அந்தாதி என்னும் நூலைப்பாடியவர் யார்?
கவிச்சக்கரவர்த்தி கம்பர்

16. உலக உயிர்களுக்குத் தாயாக விளங்குபவள் யார்?
அம்பிகை

17. ஏடு தொடக்கல் நிகழ்வு எப்பொழுது நடைபெறும்?
விஜயதசமி அன்று

18. அபிராமி அந்தாதியைப் பாடியவர் யார்?
அபிராமிபட்டர்

19. உமையின் வாகனம் எது?
சிங்கம்

20. தக்கனின் மகள் யார்?
அம்பிகை (தாட்சாயினியாக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. அபிராமி அம்மை எமக்குத் தருவன யாவை?
தனம், கல்வி, தளர்வறியா மனம்

22. உலக மாதாவாக விளங்குபவர் யார்?
உமாதேவியார்

23. வீரத்துக்குரிய கடவுள் யார்?
துர்க்கை

24. ஆயகலைகளைத் தருபவள் யார்?
அபிராமி அல்லது கலைமகள்

25. அபிராமி அந்தாதியில் எப்பாடலின் போது அன்னை அபிராமி தோட்டைக்கழற்றி எறிந்தார்?
"விழிக்கே அருள் உண்டு" என்ற பாடலின் போது

26. அபிராமி அந்தாதியில் எத்தனை பாடல்கள் உள்ளன?
நூற்றியொரு பாடல்கள்

27. அபிராமிப்பட்டர் எவ்வூரில் பிறந்தார்?
திருகடவூர் ஊரில்

28. திருகடவூர் கோவிலின் இறைவன் இறைவி பெயர் என்ன?
இறைவன் - அமிர்தகடேசுவரர்
இறைவி - ஸ்ரீ அபிராமி

29. சக்தி பீடங்கள் எத்தனை?
64 அறுபத்து நான்கு

30. சகலகலா வல்லி மாலை யாரால் பாடப்பட்டது?
குமரகுருபர சுவாமிகளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. குமரகுருபரரின் குரு யார்?
மாசிலாமணித் தேசிகர்

32. சக்தி வழிபாட்டைக் குறிப்பிடும் ஆகமங்கள் பெயர் என்ன?
தந்திரங்கள்

33. குமரகுரபர சுவாமிகள் சகலகலாவல்லி மாலையை ஏன் பாடினார்?
டில்லி பாதுஷாவைத் சந்தித்து உரையாட வடமொழி (இந்துஷ்தான்) அறிவைத் தரும்படி வேண்டிப் பாடப்பட்டது.

34. சக்தியை முழுமுதற் கடவுளாகக் கொண்டுள்ள சமயம் எது?
சாக்தம்

35. சக்தியைத் தவிர்த்து சிவனை மட்டும் வழிபட்ட முனிவர் யார்?
பிருங்கி முனிவர்

36. உமையம்மை அனுட்டித்த விரதம் எது?
கேதார கௌரி விரதம்

37. ஆதி பராசக்தியினால் வதம் செய்யப்பட்ட அசுரன் யார்? மகிடாசுரன்

38. வீட்டில் விளக்கேற்றிய பின் கொடுக்கக் கூடாதவை?
1. மோர்
2. பணம்
3. சுண்ணாம்பு
4. எண்ணெய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05.திருமால்

01. காத்தற் கடவுள் யார்?
திருமால்

02. நீல நிற மேனியை உடைய இறைவன் யார்?
கண்ணன்

03. கண்ணன் நடனமாடிய பாம்பு எது?
காளியன்

04. யமுனா நதி எங்கே உள்ளது?
இந்தியாவிலே

05. சொர்க்கவாசல் ஏகாதசி விரதம் எக்கடவுளுக்குரியது?
திருமாலுக்குரியது

06. ஆயர்களின் செல்வம் என எதைக் குறிப்பிடுவர்?
பசுக்களை

07. கண்ணன் வளர்ந்து வந்த இடம் எது?
கோகுலம்

08. மழையைத் தரும் கடவுளாக விளங்கியவர் யார்?
இந்திரன்

09. எந்த மலையைக் கண்ணன் குடையாகப் பிடித்தான்?
கோவர்த்தன மலையை

10. திருமால், சிவனின் (சோதியின்) அடியைத் தேடிய தினம்யாது?
சிவராத்திரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. துவாரகையை அரசு புரிந்தவர் யார்?
கண்ணன்

12. குசேலர் வசித்த இடத்துக்கு என்ன பெயர்?
அவந்தி

13. குசேலரின் இயற் பெயர் என்ன?
சுதாமர்

14. மகாவிஷ்ணுவால் தீபாவளித் திருநாளில் கொல்லப்பட்ட அசுரன் யார்?
நரகாசுரன்

15. திருமாலின் வாகனம் யாது?
கருடன்

16. கண்ணன் உபதேசித்த நூல் எது?
கீதை

17. திருவரங்க மாநகரில் உள்ள கடவுள் யார்?
திருமால்

18. நாச்சியார் திரு மொழியைப் பாடியவர் யார்?
ஆண்டாள்

19. திருப்பாவை விரதம் யாரை நோக்கி அனுட்டிக்கப்படும்?
திருமாலை

20. திருப்பாவை விரதம் எந்த மாதத்தில் அனுட்டிக்கப்படும்?
மார்கழி மாதம்

21. திருமால், பிரமா, இருவரும் அடிமுடி தேடிய வரலாறு எந்த நூலில் உள்ளது?
கந்தபுராணத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. **ஆண்டாளினால் பாடப்பட்ட இரு பிரபந்தங்கள் எவை?**
திருப்பாவை, நாச்சியார் திருமொழி

23. **ஆண்டாள் எத்தனையாம் நூற்றாண்டில் வாழ்ந்தார்?**
கி.பி 8ம் நூற்றாண்டில்

24. **ஆண்டாளின் இளமைப் பெயர் என்ன?**
கோதை

25. **ஆண்டாளின் வளர்ப்புத் தந்தை யார்?**
பெரியாழ்வார்

26. **குழந்தை வடிவினராக உலகைக் காப்பவர் யார்?**
கண்ணன்

27. **பாற்கடலைக் கடையும் போது திருமால் எடுத்த அவதாரம் என்ன?**
கூர்ம அவதாரம்

28. **நாலாயிரத் திவ்விய பிரபந்தம் பாடியோர் தொகை யாது?**
பன்னிரெண்டு

29. **நாலாயிரத் திவ்விய பிரபந்த தொகுப்பு யாரால் தொகுக்கப்பட்டது?**
சிறிமத் நாத முனிவரால்

30. **தச அவதாரங்கள் எவை?**
மச்ச அவதாரம்
கூர்ம அவதாரம்
வராக அவதாரம்
நரசிங்க அவதாரம்
வாமண அவதாரம்
பரசுராம அவதாரம்
இராம அவதாரம்
கிருஷ்ண அவதாரம்
பலராம அவதாரம்
கல்கி அவதாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06. கிராமிய தெய்வங்கள்

01. சைவத் தமிழ் மக்களின் வழிபாட்டு முறைகள் எத்தனை வகை? எவை?

இருவகைப்படும் (1) ஆகம முறைக்கு அமைந்தவை
(2) ஆகம முறைக்கு அமையாதவை

02. கிராமிய தெய்வ வழிபாட்டு முறை என்பது என்ன?

ஆகம முறைக்குப் புறம்பாக பக்தி நம்பிக்கை என்பவற்றுக்கு முதன்மையளிக்கும் வழிபாட்டு முறை

03. கிராமிய வழிபாட்டுத் தெய்வங்கள் எவை?

ஆண் தெய்வங்கள் - வைரவர், வீரபத்திரர், ஐயனார், காத்தவராயன், முனியப்பர், பெரியதம்பிரான், அண்ணமார்

பெண் தெய்வங்கள் - கண்ணகியம்மன், மாரியம்மன், காளி, நாச்சிமார்

| | தெய்வம் | வழிபடுவதற்கான காரணம் | வழிபாட்டு முறை |
|---|---|---|---|
| 1. | வைரவர் | காவற் தெய்வம் | மடை |
| 2. | வீரபத்திரர் | காவற்தெய்வம் | பொங்கல் |
| 3. | ஐயனார் | காவற்தெய்வம் | சந்தனக் காப்பிடல், மடை |
| 4. | அண்ணமார் | குலதெய்வம் | மடை |
| 5. | பெரியதம்பிரான் | குலதெய்வம் | பொங்கல்,மடை |
| 6. | முனியப்பர் | வீரவணக்கம் | சடங்கு |
| 7. | காத்தவராயன் | காவற்தெய்வம் | பொங்கல், மடை கூத்து |
| 8. | காளி | காவற்தெய்வம் | சடங்கு |
| 9. | மாரியம்மாள் | குளிர்ச்சி தருதல் நோய் நீக்கல் | மடை, பொங்கல் கரகாட்டம், குளிர்த்தி |
| 10. | நாச்சிமார் | காவற் தெய்வம் | பொங்கல் |
| 11. | கண்ணகி | குளிர்ச்சியைத் தருதல் | பொங்கல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07. சிவ சின்னங்கள்

**01. சிவ சின்னங்கள் எவை?**
விபூதி, உருத்திராக்கம், பஞ்சாட்சரம்

**02. சின்னம் என்பது என்ன?**
குறி அல்லது அடையாளம் என்பதாகும்

**03. புறச் சிவ சின்னங்கள் எவை?**
உடலின் புறத்தே அணியப்படும் விபூதி, உருத்திராக்கம் என்பன

**04. அகச்சிவ சின்னம் என்பது என்ன?**
பஞ்சாச்சரம் ஆகிய நாவிலும், அகத்தேயும் நிகழ்வது

**05. திருநீற்றின் மறு பெயர்கள் என்ன?**
விபூதி, பசிதம், பசுமம், இரட்சை, ஷாரம், என்பன

**06. விபூதி என்பதன் பொருள் என்ன?**
தன்னைத் தரித்தவர்க்கு மேலான செல்வத்தைக் கொடுப்பது

**07. பசிதம் என்பதன் பொருள் யாது?**
ஒளியைக் கொடுப்பது, சிவஞானத்தை விளக்குவது

**08. பசுமம் என்பதன் கருத்து யாது?**
பாவங்களை எரித்து நீறாக்குவது என்பது

**09. இரட்சை என்பதன் பொருள் யாது?**
தன்னைத்தரித்த ஆன்மாக்களை இரட்சிப்பது என்பது

**10. ஷாரம் என்பதன் பொருள் யாது?**
உயிர்களினது மலத்தை நீக்குவது என்பதாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. **திருநீறு எத்தனை வகையாகத் தரிக்கப்படும்? அவை எவை?**
இரண்டு வகை? (1) உத்தூளனம் (2) திரிபுண்டரம்

12. **திருநீறு எவ்வாறு தரித்தல் வேண்டும்?**
சிவபெருமானைத் தியானித்து பரமாணுவளவேனும் நிலத்திலே சிந்தா வண்ணம் அண்ணாந்து சிவ சிவ என்று கூறிக்கொண்டு வலக்கையின் நடு விரல் மூன்றினாலும் தரித்தல் வேண்டும்.

13. **திருநீறு அணிவதற்கு உத்தம திக்குகள் எவை?**
வடக்கு முகம் அல்லது கிழக்கு முகம்

14. **உத்தூளனமாகப் பூசுதல் என்பது என்ன?**
பரவிப் பூசுதல் என்பதாகும்

15. **திரிபுண்டரமாகத் தரிக்கத் தகுதிபெற்றவர் யார்?**
சமய தீட்சை பெற்றவர்

16. **திரிபுண்டரமாகத் தரிக்கத்தக்க இடங்கள் எவை?**
நெற்றி, மார்பு, தொப்பூழ், முழந்தாள்கள், முழங்கைகள், புயங்கள், மணிக்கட்டுக்கள், விலாப்புறங்கள், முதுகு, கழுத்து என்னும் பதினாறு இடங்கள்.

17. **பெரியவர்களிடம் விபூதியை எவ்வாறு வாங்குதல் வேண்டும்?**
முதலில் பெரியவர்களை வணங்கி வலது கையின் கீழ் இடது கையை வைத்து இரு கைகளினாலும் பயபக்தியுடன் வாங்குதல் வேண்டும்.

18. **ஒருவன் திருநீறு அணியும் போது அவ் திருநீறு படிகின்ற ஒவ்வொரு இடமும் சிவலிங்கமாகிறதென்று கூறுவது எது?**
**உபநிடதங்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. சைவசமயி என்று கூறுவதற்குத் தகுதி பெற்றவர்கள் யாவர்?
தீட்சை பெற்றவர்கள்

20. நீறில்லா நெற்றிப பாழ் எனக் கூறியவர் யார்?
ஔவையார்

21. திருநீற்றைத் திரிபுண்டரமாகத் தரிக்கும் போது கவனிக்க வேண்டிய விதிகள் எவை?
வளையாதிருத்தல், இடையறாதிருத்தல், ஒன்றையொன்று நீட்டாதிருத்தல், மிக அகலாதிருத்தல், ஒவ்வோர் அங்குல இடைவெளி இருத்தல்

22. தீட்சை பெறுவதனால் கிடைக்கும் நன்மைகள் எவை?
i. இறை நம்பிக்கை ஏற்படும்
ii. இறையருள் கிடைக்கும்
iii. மனத்திலிருந்து பயம் நீங்கும்
iv. மனத்தில் உறுதி ஏற்படும்

23. திருநீற்றின் உயர்வைப் பதிகமாகப் பாடியவர் யார்?
திருஞானசம்பந்தர்

24. விபூதியின் மகத்துவத்தை ஆறுமுகநாவலர் எந் நூலில் குறிப்பிட்டுள்ளார்?
நித்திய கருமவிதி என்னும் நூலில்

25. கங்காளன் பூசும் கவசத் திருநீறு என்று கூறியவர் யார்?
திருமூலர்

26. "ஆனநீற்றுக் கவசம்அடையப் புகுமின்" எனக்கூறியவர் யார்?
மாணிக்கவாசக சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. மறுவில்லாத வெண்ணீறு பூசுதல் மன்னுமொன்றுடைத்தே எனக் கூறியவர் யார்?
சுந்தர மூர்த்தி நாயனார்

28. "திருவாய் பொலியச் சிவாய நம என்று திருநீறணிந்தேன் தருவாய் சிவகதி நீ பாதிரிப்புலியூர் அரனே" எனக் கூறியவர் யார்?
திருநாவுக்கரசர் சுவாமிகள்

29. "மந்திரம் நமச்சிவாய ஆகநீறணியப்பெற்றால் வெந்தறும் வினையும் நோயும் வெவ்வழல் விறகிட்டன்றே" எனப் பாடியவர் யார்?
திருநாவுக்கரசு சுவாமிகள்

30. உருத்திராக்கம் என்பதன் பொருள் யாது?
உருத்திரனது கண் எனப் பொருள் படும்

31. உருத்திராக்கம் எவ்வாறு உருவானது?
திரிபுரத்து அசுரர்களாலே தமக்கு ஏற்பட்ட துன்பங்களைப்பற்றி தேவர்கள் சிவபிரானிடம் முறையிட்ட போது சிவனது மூன்று கண்களிலிருந்தும் சிந்திய மணியே உருத்திராக்கம்.

32. ஆன்மாக்களிடம் இறைவன் கொண்டுள்ள பெரும் கருணையைச் சதா நினைவூட்டும் சாதனமாக விளங்குவது எது?
உருத்திராக்கம்

33. பத்தினிப்பெண்களுக்கு மாங்கல்யம் புனித ஆபரணமாக விளங்குவது போல் சிவனடியார்களுக்கு புனித சின்னமாக விளங்குவது எது?
உருத்திராக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. **உருத்திராக்கத்தின் மறு பெயர்கள் என்ன?**
கண்டி, அக்கு, கண்மணி, சிவமணி, தாழ்வடம், திரு, அடையாளம், என்பன.

35. **உருத்திராக்கம் அணிந்தால் பெறும் பேறு பற்றி யார் குறிப்பிட்டுள்ளார்?**
திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

36. **எக்காலங்களில் உருத்திராக்கம் அணிதல் வேண்டும்?**
சந்தியாவந்தனம், சிவபூசை, செபம், தேவார திருவாசக பாராயணம், புராணபடனம், சிவாலய தரிசனம் ஆகிய காலங்களில்..

37. **எமது உடலின் தலை, கழுத்து, மார்பு ஆகிய இடங்களில் எத்தனை மணிகள் உள்ள உருத்திராக்க மாலைகள் அணியப்படல் வேண்டும்?**
தலையில் 36 மணிகள் உள்ள மாலையும் கழுத்தில் 32 மணிகள் உள்ள மாலையும் மார்பில் 108 மணிகள் உள்ள மாலையும் அணியப்படல் வேண்டும்

38. **உருத்திராக்க மணிகள் பற்றிய வரலாறுகள் கூறும் நூல்கள் எவை?**
உபதேச காண்டம், சூதசங்கிதை

39. **தற்போது நாம் அணியும் உருத்திராக்கம் எங்கிருந்து பெறப்படுகின்றது?**
இமையமலைச் சாரலில் வளரும் விருட்சத்தின் விதையில் இருந்து பெறப்படுகின்றது

40. **சைவசமயத்தின் மகா மந்திரம் எது?**
நமசிவாய அல்லது சிவாயநம

41. **தூல பஞ்சாக்கரம் என்பது என்ன?**
சிவாயநம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. **பஞ்சாக்கரம் சிவபெருமானுடைய திருநடனத்தின் வடிவாகும் எனக் குறிப்பிடும் நூல் எது?**
மனவாசகங் கடந்தாரின் உண்மைநெறி விளக்கம் என்னும் நூல்

43. **நாவினுக்கு அருங்கலம் எது?**
நமசிவாய

44. **தீட்சை பெறுவதற்கு ஏற்ற வயது யாது?**
ஏழு வயது அல்லது ஒன்பது வயது

45. **தீட்சையை யாரிடம் இருந்து பெறுதல் வேண்டும்?**
தகுந்த குருவிடம் இருந்து

46. **உருத்திராக்கத்தை யார் அணியக் கூடாது?**
மதுபானம் அருந்துவோர் மாமிசம் உண்போர்

47. **தீட்சைகள் எத்தனை வகை? அவை எவை?**
ஏழு வகை
i. நயன தீட்சை
ii. பரிச தீட்சை
iii. மானசதீட்சை
iv. சாத்திர தீட்சை
v. மந்திர தீட்சை
vi. யோகதீட்சை
vii. ஔத்திரிதீட்சை

48. **சகலர் எனப்படும் ஆன்மாக்களுக்குச் செய்யப்படும் தீட்சை யாது?**
ஆதார தீட்சை

49. **உபதேசம் பெறுதல் என எதனைக் கூறுவர்?**
தீட்சை பெறுதலை

50. **சிவாயநம என்பதிலுள்ள ஒவ்வொரு எழுத்துக்களும் எவற்றைக் குறித்து நிற்கின்றன?**
சி - சிவனையும்
வ - அருட்சக்தியையும்
ய - ஆன்மாவையும்
ந - மலமாயையும்
ம - பாசமலத்தையும் குறித்து நிற்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08.ஆலய வழிபாடும் ஆலய அமைப்பும்

01. ஆலயம் என்பதன் பொருள் யாது?
ஆன்மா இறைவனிடத்தில் லயப்படுகின்ற இடம்

02. ஆலயம் சென்றவுடன் முதலில் எதை வணங்க வேண்டும்?
கோபுரத்தை

03. ஆலயத்திற்குச் செல்லும்போது எவ்வாறு செல்லுதல் வெண்டும்?
நீராடி தோய்ந்து உலர்ந்த ஆடை அணிந்து பூசைப் பொருட்களுடன் செல்லுதல் வேண்டும்.

04. எவ்வெவ் காலங்களில் சுவாமி தரிசனம் செய்தல் வேண்டும்?
வெள்ளிக்கிழமையிலும், விசேட தினங்களிலும்

05. நாம் இறைவனை வழிபடுவதற்கென்று விசேடமாக அமைக்கப்பட்ட இடம் எது?
ஆலயம்

06. ஆலய வழபாட்டின் பயனைத் தரும்படி இறுதியாக யாரை வழிபடல் வேண்டும்?
சண்டேஸ்வரரை

07. அர்ச்சனைப் பொருட்கள் எவை?
பழம், பாக்கு, வெற்றிலை,தேங்காய்

08. பிரார்த்தனை என்றால் என்ன?
இறைவனுடன் பேசுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. கூட்டுப்பிரார்த்தனை நடைபெறும் இடங்கள் எவை?
(1) ஆலயம் (11) பாடசாலை (3) வீடு

10. கோலம் என்றால் என்ன?
அழகு அல்லது ஒழுங்கு

11. நிறை குடம் என்றால் என்ன?
பூரண கும்பம்

12. பூ என்பதன் பொருள் யாது?
மலர்ச்சி அல்லது பொலிவு

13. நிறைகுடம் வைப்பதனால் வீடு எவ்வாறு காட்சி தரும்?
மங்கலகரமாக காட்சி தரும். உள்ளங்களிலும் நிறைவு ஏற்படும்.

14. பூக்களைக் கோர்வையாகக்கட்டுவதை எவ்வாறு அழைப்பர்?
பூமாலை என அழைப்பர்

15. தீபம் என்பதன் பொருள் யாது?
ஒளி

16. நிறைகுடம் வைப்பதற்குத் தேவையான பொருள்கள் எவை?
நெல், மாவிலை, சிறிய குடம் அல்லது செம்பு, குத்து விளக்கு, பழம், தலை வாழை இலை, பிள்ளையார், தேங்காய்

17. குத்துவிளக்கு எரிக்கும் போது எத்தனை திரிகள் போட்டு எரிக்க வேண்டும்?
ஒன்று அல்து மூன்று அல்லது ஐந்து திரிகள்

18. பிரார்த்தனையால் ஏற்படும் பயன்கள் தருக?
i. மன ஒருமைப்பாடு ii. ஒழுக்கம்

19. ஆண்கள் செய்யும் நமஸ்காரம் யாது?
அட்டாங்க நமஸ்காரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. பஞ்சபுராணத்தில் இறுதியாகப் பாடப்படுவது எது?
பெரிய புராணம்

21. திருச்சிற்றம்பலம் கூறப்படும் இரு சந்தர்ப்பங்கள் எவை?
பஞ்சபுராணம் ஓத முன்பும், ஓதிய பின்பும்

22. திருக்கோயில்களில் இறுதியாக எத் தெய்வத்திற்குப் பூசை நடைபெறும்?
சண்டேசுவரருக்கு

23. சிவாலய தரிசன பயனைத் தருபவர் யார்?
சண்டேசுவரர்

24. ஆண் , பெண் இருபாலாருக்கும் செய்யக்கூடிய நமஸ்காரம் எது?
திரியாங்க நமஸ்காரம்

25. பூசைப் பொருட்களை ஆலயத்திற்கு கொண்டு செல்லும்போது எப்படிக் கொண்டு செல்ல வேண்டும்?
இடுப்பிற்கு மேலே கைகளில் ஏந்திச் செல்ல வேண்டும்.

26. கிழக்கு நோக்கிய சந்நிதியிலே எத்திசை நோக்கி தலை வைத்து வணங்க வேண்டும்?
வடக்கு நோக்கி

27. இறைவழிபாட்டை எளிதாக்குவது எது?
கிரியை என்னும் செயல் முறை

28. ஆலயத்தில் இடம் பெறும் பூசைகள் எவை?
நித்திய பூசை, நைமித்திய பூசை

29. ஆண்கள் செய்யும் நமஸ்காரம் யாது?
அட்டாங்க நமஸ்காரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**29. ஆறுகாலப் பூசைகளும் எவை?**

i. அதிகாலை ii. காலை iii. நண்பகல்
iv. மாலை v. இரவு vi. நள்ளிரவு

**30. பிற உயிர்களின் நன்மைக்காக செய்யப்படும் பூசை எது?**

பரார்த்த பூசை

**31. பூசையின் அங்கங்கள் எவை?**

அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியம், தீபாராதனை, அர்ச்சனை, தோத்திரம், வாழ்த்து

**32. தீப வகைகள் ஐந்து தருக?**

(1) ஒற்றைத்தீபம் (2) நாகதீபம்
(3) இடபதீபம் (4) கும்பதீபம்
(5) கற்பூரதீபம் (6) வில்வ தீபம்
(7) பஞ்சாராத்தி

**33. தீபம் மூன்று முறை காட்டப்படுவதன் காரணம் யாது?**

1) உலக நன்மைகளுக்காக 2) நாட்டு நன்மைக்காக
3) எல்லா உயிரினங்களின் நன்மைக்காக

**34. வீட்டில் சுவாமிப்படங்களை எத்திசை நோக்கி வைக்க வேண்டும்?**

கிழக்குத்திசை நோக்கி வைத்தல் வேண்டும்
வடக்கு திசை நோக்கி வைத்தல் கூடாது

**35. சைவ இல்லங்களில் வெள்ளிக்கிழமை தோறும் மாலைவேளையில் இடம் பெற வேண்டிய நிகழ்வு யாது?**

கூட்டு வழிபாடு, பஞ்சபுராணம் ஓதுதல், ஆராதனை

**36. சுவாமி அறையில் மாவிலைகளைத் தொங்கவிடும் போது எவ் எண்ணிக்கையில் அமைய வேண்டும்?**

ஐந்து, ஏழு, ஒன்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. **கோயில் என்று சிறப்பாக அழைக்கப்படும் தலம் எது?**
சிதம்பரம்

38. **சிவாலய தரிசன விதி என்னும் நூல் யாரால் எழுதப்பட்டது?**
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களால்

39. **சூரியன் உதித்த பின்பு ஏழரை நாழிகைக்குள் நடைபெறும் பூசையின் பெயர் என்ன?**
காலைச் சந்திப் பூசை

40. **இறைவனுக்குப் படைக்கும் உணவுக்கு என்ன பெயர்?**
நைவேத்தியம்

41. **உடம்பால் ஆலயங்களில் செய்யும் பணியை எவ்வாறு அழைப்பர்?**
சரியைத் தொண்டு

42. **சிறப்பான தோரணங்களின் பெயர் என்ன?**
கண்ணாடித் தோரணம், கொத்துத் தோரணம்

43. **தொண்டு என்றால் என்ன?**
கைமாறு எதனையும் எதிர்பாராது செய்யும் பணி

44. **பஞ்சகௌவியங்கள் எவை?**
பால், நெய், தயிர், கோசலம், கோமயம்

45. **கோமயம் என்பதன் பொருள் என்ன?**
பசுவின் சாணி

46. **சிவன் ஆலயங்களில் மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டிருப்பது என்ன?**
சிவலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. சிவன் ஆலயங்களில் இலிங்கோற்பவ மூர்த்தி எங்கு அமைக்கப்பட்டிருக்கும்?
கருவறையில் மேற்குப்புறச் சுவரில்

48. சிவன் ஆலய கருவறைச் சுவரில் தெற்கு நோக்கியிருக்கும் சிவமூர்த்தம் யாது?
தட்சணாமூர்த்தி

49. தட்சணாமூர்த்திக் கடவுளுக்கு வழங்கப்படும் வேறு பெயர் யாது?
தென்முகக் கடவுள்

50. இந்து சமயத்தின் முதல் நூல்கள் எவை?
வேதம், ஆகமம்

51. திருக்கோவிலின் அமைப்பு வழிபாட்டு முறை என்பவற்றைக் கூறும் நூல் எது?
ஆகமம்

52. ஒரு ஆலயத்தில் எத்தனை ஆண்டுக்கொருமுறை குடமுழுக்கு நடாத்தப்பட வேண்டும்?
12 ஆண்டுகளுக்கொருமுறை

53. கோவிலில் களவு போன்ற ஆசாரக்குறைவு ஏற்படும் போது நிகழும் பிரதிஷ்டாக்கிரியையின் பெயர் என்ன?
அந்தரிதம்

54. "உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம்" எனக் கூறியவர் யார்?
திருமூலர்

55. ஆலயத்தின் கொடி மரம் எதனைக் குறிக்கும்?
சிவனை (பதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. கொடிமரத்தின் அடியில் உள்ள கணபதிக்கு என்ன பெயர்?
மூலாதாரக் கணபதி

57. கொடிமரத்தைச் சுற்றியுள்ள தர்ப்பைக்கயிறு எதைக்குறிக்கும்?
பாசம் (மலம்)

58. ஆலயத்தின் எப்பகுதி எமது உடலின் மார்புப்பகுதியைக் குறிக்கும்?
மகாமண்டபம்

59. பலனை எதிர்பார்த்துச் செய்யும் கிரியை யாது?
காமிகக் கிரியை

60. ஆலயங்களில் செய்யப்படும் கிரியைகளில் பூசை முடிவில் செய்யப்படும் கிரியை எது?
ஆசீர்வாதம் (வாழ்த்து)

61. ஆகம விதிப்படி அமைக்கப்பட்ட ஆலயங்களில் மண்டபங்கள் ஒவ்வொன்றும் உடலின் எப்பகுதியைக் குறிக்கின்றன?

| | | |
|---|---|---|
| கர்ப்பக்கிரகம் | - | சிரசு |
| அர்த்த மண்டபம் | - | கழுத்து |
| மகா மண்டபம் | - | மார்பு |
| தரிசன மண்டபம் | - | வயிறு |
| அலங்கார மண்டபம் | - | கால்கள் |
| சபா மண்டபம் | | |
| இராச கோபுரம் | - | பாதம் |

62. கொடிமரம் எதற்கு ஒப்பிடப்படுகிறது?
முள்ளந்தண்டெலும்புக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63. கொடிமரம், கொடிச்சீலை, தர்ப்பைக்கயிறு, என்பன எவற்றைக் குறிக்கும்?

கொடிமரம் - சிவம்
கொடிச்சீலை - ஆன்மா
தர்ப்பைக்கயிறு - பாசம்

64. கொடித்தம்பத்தை அடுத்துக் காணப்படுவது எது?

பலிபீடம் அல்லது பத்திரலிங்கம்

65. பலிபீடம் என்பது என்ன?

பாசம் ஒடுங்கும் இடம்

66. பலிபீடத்துக்கு அப்பால் அமைந்திருப்பது என்ன?

நந்தி

67. நந்தி எதைக் குறிப்பிடுகின்றது?

பாசம் நீங்கிப் பக்குவம் அடைந்த ஆன்மாவைக் குறிக்கின்றது

68. தீபங்கள் எந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ள விதிக்கமைய காட்டப்படும்?

ஆகமம்

69. சண்டேசுரரை தரிசித்து எத்தனை முறை கை கொட்ட வேண்டும்?

மூன்று முறை

70. முற்றாக அழிந்த ஆலயத்தை மீண்டும் அமைத்து குடமுழுக்குச் செய்யும் கிரியையின் பெயர் என்ன?

ஆவர்த்தனம்

71. பூசையில் காட்டப்படும் உபசாரப்பொருட்கள் எவை?

கொடி, குடை, சாமரம், கண்ணாடி, ஆலவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 09.புகழ் பெற்ற ஈழத்துத்திருக் கோவில்கள்

01. இலங்கையில் பாடல் பெற்ற சிவத் தலங்கள் எவை?
(i) திருக்கேதீஸ்வரம் (ii) திருக்கோணேஸ்வரம்

02. திருக்கேதீஸ்வர ஆலய இறைவன் இறைவி பெயர் என்ன?
இறைவன் - திருக்கேதீஸ்வர நாதர்
இறைவி - கௌரி அம்பாள்

03. திருக்கேதீஸ்வர ஆலயத்தின் தீர்த்தத்தின் பெயர் என்ன?
பாலாவி

04. திருக்கேதீஸ்வர ஆலயம் எங்கே அமைந்துள்ளது?
மன்னாரில் மாதோட்டத்தில்

05. தேன்பொந்து என திருக்கேதீஸ்வர ஆலயத்தைக் கூறியவர் யார்?.
ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர்

06. கேதீஸ்வரம் என்னும் பெயர் ஏன் ஏற்பட்டது?
கேது என்னும் அசுரன் வழிபட்டு முத்தியடைந்த தலம் என்பதனால்

07. திருக்கேதீஸ்வரத் தல விருட்ஷம் எது?
வன்னி மரம்

08. திருக்கேதீஸ்வர வரலாறு பற்றிக் கூறும் நூல்கள் எவை?
தட்சண கைலாய மான்மியம்
மாந்தைப் பள்ளு
திருக்கேதீஸ்வர நாதர் திருப்பதிகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கேதீஸ்வர நாதர் பிள்ளைவிடு தூது
திருக்கேதீஸ்வர நாதன் ஊஞ்சல்
திருக்கேதீச்சரப் புராணம்
திருக்கேதீச்சரத்து கௌரிநாயகி பிள்ளைத் தமிழ்

09. **திருக்கேதீஸ்வரத் தலத்தின் மீது தேவாரம் பாடியவர் யார்?**
திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்,
சுந்தரமூர்த்தி நாயனார்.

10. **திருக்கேதீஸ்வரத்தைக் கட்டிய இராவணனின் மாமன் பெயர் என்ன?**
மாயன்

11. **இறைவன் நாகநாதன் என்ற பெயரோடு வீற்றிருக்கும் தலம் எது?**
திருக்கேதீஸ்வரம்

12. **திருக்கோணேஸ்வர ஆலய இறைவன் இறைவி பெயர் என்ன?**
இறைவன் பெயர் - திருக்கோணேஸ்வர நாதர்
இறைவி பெயர் - மாதுமையம்பாள்

13. **திருக்கோணேஸ்வர ஆலயத் தீர்த்தத்தின் பெயர் என்ன?**
பாவநாசம்

14. **திருக்கோணேஸ்வரத் திருப்பதிகத்தைப் பாடியவர் யார்? எங்கிருந்து பாடினார்?**
திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் இராமேஸ்வரத்தில் இருந்து பாடினார்

15. **தட்சணகைலாயம் என்னும் பெயரில் அழைக்கப்படும் தலம் எது?**
திருக்கோணேஸ்வரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. **திருக்கோணேஸ்வரத்தின் வேறு பெயர்கள் தருக?**
திரிகூடம், தென்கையிலை, கைகேசி கோயில், சுவாமிமலை, என்பன

14. **திருக்கோணேஸ்வர ஆலயத்தின் தல விருட்சம் யாது?**
கல்லால் மரம்

15. **திருக்கோணேஸ்வர ஆலயத்தின் வரலாற்றைக் கூறும் நூல்கள் எவை?**
தட்சணகைலாய புராணம், திருக்கோண நாதர் வைபவம், திருக்கோணாசல புராணம், திருக்கோணமலை அந்தாதி, திருக்கோணாசல வைபவம்

16. **திருக்கோணேஸ்வர ஆலய உற்சவம் எப்போது நடை பெறும்?**
பங்குனி பூரணையும் உத்தரமும் கூடிய நாளில் தொடங்கி அடுத்து வரும் திருதியைத் திதியுடன் கூடிய பரணி நாளில் தீர்த்தம் நடைபெறும்.

17. **திருக்கோணேஸ்வர ஆலயம் யாரால் கட்டப்படது?**
மனுச்சோழ மன்னனால்

18. **முன்னேஸ்வர ஆலம் எங்கு உள்ளது?**
ஈழநாட்டின் வடமேல் மாகானத்தில் சிலாபம் பகுதியில் உள்ளது

19. **முன்னேஸ்வர ஆலய இறைவன், இறைவி பெயர் என்ன?**
இறைவன் - முன்னேசுவரன், சுயம்புரேசுரர்
இறைவி - வடிவாம்பிகை

20. **முன்னேஸ்வர ஆலயத்தில் உள்ள தீர்த்தங்கள் எவை?**
மாயவனாறு சிவதீர்த்தம், சித்தாமிர்த தீர்த்தம், விநாயக தீர்த்தம்,விட்டுணு தீர்த்தம், துவட்டா தீர்த்தம், துர்க்கா தீர்த்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. **முன்னேஸ்வர ஆலயம் போர்த்துக்கேயரினால் இடித்து அழிக்கப்பட்டுப் பின்பு மீண்டும் எம் மன்னனால் எத்தனையாம் ஆண்டில் திருத்தி அமைக்கப்பட்டது?**
கண்டி இராசனாகிய கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனால் 1753ம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டது.

22. **முன்னேஸ்வர இறைவனுக்கு சுயமபுரேஸ்வரர் என ஏன் பெயர் ஏற்பட்டது?**
உலகம் படைக்கப்பட்ட போது உலக நன்மைக்காக இவ்வாலய சிவலிங்கம் சுயம்பு லிங்கமாகத் தோன்றியமையால்.

23. **அறுபத்து மூன்று நாயன் மார்களுக்கும் சிலை வைத்து நாள் தோறும் பூசை வழிபாடாற்றிவரும் ஈழத்தில் தனிச்சிறப்புப்பெற்ற தலம் எது?**
முன்னேஸ்வரம்

24. **முன்னேஸ்வர ஆலய்ம் எவ் ஆற்றங்கரையில் அமைந்துள்ளது?**
மாயவனாற்றங்கரையில் (தெதுறு ஓயா)

25. **முன்னேஸ்வரை ஆலய வரலாறு தொன்மை பற்றிக் குறிப்பிடும் நூல்கள் எவை?**
தட்சணகைலாய புராணம்
முன்னேஸ்வர மாண்மியம்
முன்னேஸ்வர அந்தாதி
முன்னேஸ்வரப் பாமாலை
முன்னைநாத சுவாமி வடிவழகம்மை
முன்னை நாத சுவாமி நவ தூது

26. **முன்னேஸ்வரத்தில் மகோற்சவம் எத்தனை நாட்கள் நடைபெறும்?**
இருபத்தேழு நாட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. **முன்னேஸ்வரத்தில் சிறப்பாக நடைபெறும் விழா எது?**
வசந்த நவராத்திரி விழா
பக்தோற்சவம்

28. **நகுலேஸ்வரம் எங்கே அமைந்துள்ளது?**
இலங்கையின் வடபகுதியில் கீரி மலையில் அமைந்துள்ளது

29. **கீரிமலையின் புராதன பெயர் யாது?**
திருத்தம்பலை

30. **எத்தலத்தில் கீரி முகம் மனித முகமாக மாற்றம் பெற்றது?**
நகுலேஸ்வரத்தில்

31. **கீரிமலையை வடமொழியில் எவ்வாறு அழைப்பர்?**
நகுலகிரி

32. **நகுலேஸ்வர ஆலய இறைவன் இறைவி பெயர் என்ன?**
இறைவன் - நகுலேசுரர்
இறைவி - நகுலேசுவரி நகுலாம்பிகை

33. **நகுலேஸ்வர ஆலய இறைவனின் புராதன பெயர் என்ன?**
திருத்தம்பலேசுவரர்

34. **நகுலேஸ்வர ஆலய மகோற்சவம் எப்போது நடைபெறும்?**
மாசி மாதத்தில் 15 நாட்கள் நடைபெறும்.
மகாசிவராத்திரியன்று தீர்த்தோற்சவம் நடைபெறும்

35. **திருப்புகழில் நகுலேஸ்வரம் எவ்வாறு போற்றப் படுகின்றது?**
அருக்கொணாமலை எனப் போற்றப்படுகின்றது

36. **கதிர்காமம் என்பதன் பொருள் யாது?**
கதிர் என்றால் ஒளி. காமம் என்றால் அன்பு. தெய்வீக ஒளியும் அன்பும் நிறைந்த இடம் எனப் பொருள் படும். மேலும் திணை நிறைந்த ஊர் எனவும் பொருள் படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. **கதிர்காமத் தலத்தீர்த்தின் பெயர் என்ன?**
மாணிக்க கங்கை

38. **கதிர்காமத்தில் பூசை செய்பவர்களை ஏ்வ்வாறு அழைப்பர்?**
கப்புறாளை என அழைப்பர்

39. **கதிர்காம ஆலய மூலத்தானத்தில் வைக்கப்பட்டிருப்பது என்ன?**
இயந்திரப்பெட்டி

40. **மாவிட்ட புரம் கந்தசாமி கோவில் எங்கு உள்ளது?**
யாழ்ப்பாணத்தில் காங்கேசன் துறையில் அமைந்துள்ளது

41. **கதிர்காம ஆலய திருவிழா எப்போது நடைபெறும்?**
ஆடி மாதத்தில் நடைபெறும். தீர்த்தம் ஆடித்திருவோண நாளில் நடைபெறும்.

42. **மாவிட்ட புரம் கந்தசாமி கோவில் எங்குள்ளது?**
யாழ்ப்பாணத்தில் கா்ங்கேசன் துறையில் அமைந்துள்ளது

43. **சிவாகம சிற்ப நூல் அமைவு பெற்ற முருகன் ஆலயங்களில் பிரசித்தி பெற்ற ஆலயம் எது?**
மாவிட்ட புரம் கந்தசாமி கோவில்

44. **சிவாகம சிற்பநூல் அமைவு பெறாத மடாலய வகுப்பின் பிரசித்தி பெற்ற முருகன் ஆலயங்கள் எவை?**
கதிர்காமம், செல்வச்சந்நிதி, நல்லூர் முருகன் ஆலயங்கள்

45. **மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் வழிபட்டு குதிரை முகம் மனித முகமாக மாறியது யாருக்கு?**
மாருதப்புரவீகவல்லி

46. **மாவிட்ட புரம் என்பதன் பொருள் என்ன?**
**மா - குதிரை, விட்ட - நீக்கிய புரம் - இடம், அதாவது குதிரை முகம் நீக்கிய இடம் எனப் பொருள் படும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47 . மாவிட்ட புரம் ஆலய தலவிருட்சம் எது?
மாமரம்

48. மாவிட்ட புர ஆலயத்தின் மூலஸ்தானத்தில் உள்ளது என்ன?
முருகப்பெருமான் வள்ளி தெய்வானையுடன் இருப்பது

49. மாவிட்ட புர ஆலய மகோற்சவம் எப்போது நடைபெறும்?
பூர்வபக்க சட்டித் திதியோடு கூடிய ஆடி உத்தர நாளன்று கொடியேற்ற மும் ஆடி அமாவாசையன்று தீர்த்தமும் ஆக 25 நாட்கள் திருவிழா நடைபெறும்.

50. சின்னக்கதிர்காமம் என சிறப்பிக்கப்படும் தலங்கள் எவை?
i) செல்வச் சந்நிதி ஆலயம் ii) மண்டூர் கந்தசாமி ஆலயம்

51. மாவிட்ட புர ஆலயத்தின் தீர்த்தத்தின் பெயர் என்ன?
கீரிமலை

52. கதிர்காமத்தைச் சிறப்பித்து பாடப்பட்ட பதிகம் உள்ள நூல் எது?
திருப்புகழ்

53. கஜபாகு மன்னனுக்கு தீருநீறு கொடுத்தவர் யார்?
கோணநாதர் பிராமண வடிவமாக வந்து கொடுத்தார்

54. இறவாமற் பிறவாமற் எனத் தொடங்கும் திருப்புகழ் எத்தலத்தின் மீது பாடப்பட்டது?
கதிர்காம முருகன் தலத்தின் மீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40.பன்னிரு திருமுறைகள்

01. சாத்திரங்கள் எனப்படுவது எவற்றை?
சைவ சமயத்தில் உள்ள பதி, பசு , பாசம் உண்மைகளை நியாய சாத்திர முறையில் நிலைநாட்டிக் கூறும் நூல்கள்

02. தோத்திரங்கள் எனப்படுவது என்ன?
இறைவனையும் அடியார்களையும் போற்றித் துதிப்பனவாகிய பாடல்கள்

03. காப்பியங்கள் என்பது என்ன?
இறைவன் அருட்செயல்களையும் அடியார் வரலாறுகளையும் கதைவடிவில் எடுத்துக் கூறும் புராணம் முதலிய நூல்கள்

04. திருமுறை என்பதற்கு வழங்கப்படும் கருத்துக்கள் எவை?
1. தெய்வத்தன்மை பொருந்திய நூல்
2. உயிர்களைச் செம்மையான ஒழுங்கு முறையில் இறைவனிடம் சேர்ப்பிக்கும் நூல்
3. தொகுத்து வரிசைப்படுத்தப்பட்ட தெய்வப் பாடல்களைக் கொண்ட நூல்
4. இறைவனுக்கும் ஆன்மாக்களுக்கும் உள்ள உறவை விளக்கும் நூல்
5. மெய்யடியார்கள் உள்ளம் உருகி இறைவனிடம் செய்து கொண்ட முறையீடுகளைக் கொண்ட நூல்

05. திருமுறைகளைத் தொகுப்பித்தவர் யார்?
இராஜ இராஜ சோழன்

06. திருமுறைகளைத் தொகுத்தவர் யார்?
நம்பியாண்டார் நம்பி

07. பொல்லாப்பிள்ளையார் ஆலயம் எங்கு உள்ளது?
திருநாரையூர் என்னும் இடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. நம்பியாண்டார் நம்பிகள் வாழ்ந்த காலம் எது?
கி.பி பத்தாம் நூற்றாண்டு

09. சமகாலத்து நாயன்மார்கள் யார்? இவர்களது காலம் எது?
i) திருஞான சம்மந்தரும் திருநாவுக்கரசரும்
காலம் கி.பி ஏழாம் நூற்றாண்டு
ii) சுந்தரமூர்த்தி நாயனாரும் சேரமான் பெருமாள் நாயனாரும்
காலம் கி.பி எட்டாம், ஒன்பதாம் நூற்றாண்டு

10. பெரிய புராணம் எத்தனையாம் நூற்றாண்டில் அருளப்பட்டது?
பன்னிரெண்டாம் நூற்றாண்டில் அருளப்பட்டது

11. திருமுறைகள் வேறு எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?
தமிழ் வேதம் எனப்படும்

12. பதினோராம் திருமுறையில் எத்தனை பிரபந்தங்கள் உள்ளன?
பன்னிருவர் பாடிய நாற்பது பிரபந்தங்கள் உள்ளன.

13. திருமுறை ஓதும் போது கடைப்பிடிக்க வேண்டியவை யாவை?
i) பன்னிரு திருமுறைகளையும் முன் பின் முறை மாற்றாது ஓதுதல் வேண்டும்
ii) தினந்தோறும் குறித்த காலத்தில் ஆசார சீலமுடையவராய் புத்தகத்தை தூப தீபம் மலர் முதலியவற்றால் பூசித்து எடுத்து பாராயணம் செய்ய வேண்டும்.
iv) திருமுறைப் புத்தகம் பட்டாலே மூடிப் புனிதமான இடத்தில் வைத்துப் போற்றப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv) திருமுறைகளை ஓத முன்பும் ஓதிய பின்பும் திருச்சிற்றம்பலம் சொல்லல் வேண்டும்.

v) திருமுறைப் பாடல்களோடு பிற பாடல்களைக் கலந்து ஓதுதல் குற்றமாகும்.

**14. பெரிய புராணத்தில் எத்தனை பாடல்கள் உள்ளன?**
4250

**15. பெரிய புராணம் எங்கே அரங்கேற்றப்பட்டது?**
சிதம்பரத்தில்

**16. அடங்கன் முறை என்றால் என்ன?**
திருஞான சம்பந்தரின் 1ம், 2ம், 3ம் திருமுறைகள் திருநாவுக்கரசு நாயனாரின் 4ம், 5ம், 6ம் திருமுறைகள் சுந்தர மூர்த்தி நாயனாரின் 7ம் திருமுறை ஆகிய 7 திருமுறைகளும் அடங்கன் முறை என அழைக்கப்படும்.

**17. பெரிய புராணத்தின் வேறு பெயர்கள் தருக?**
திருத்தொண்டர் புராணம், ஆளுடைய நம்பி புராணம், திருப்புராணம் மாக்கதை

**18. திருமந்திரத்தின் வேறு பெயர்கள் தருக?**
தமிழ் ஆகமம், திருமந்திரமாலை

**19. திருமுறைப் பாடல் என்பது என்ன?**
நம்பியாண்டார் நம்பியும் அவர் காலத்தின் பின்னர் பிற பெரியோர் தொகுத்த தோத்திரங்கள் திருமுறைப் பாடல்கள் எனப்படும்.

**20. தோத்திரப்பாடல்கள் என்பது என்ன?**
பன்னிரு திருமுறைகளில் இடம்பெறாத துதிப்பாடல்கள் தோத்திரப் பாடல்கள் என்ப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. பெரிய பராணத்திற்குச் சேக்கிழார் இட்ட பெயர் யாது?
திருத்தொண்டர் புராணம்

22. பெரிய புராணத்துக்கு அடியெடுத்துக் கொடுத்தவர் யார்?
எடுத்துக் கொடுத்த அடியின் பெயர் என்ன?
அடியெடுத்துக் கொடுத்தவர் - சிவபெருமான்
அடி - உலகெலாமுனர்ந்தோதற் கரியவன்

23. திருப்பல்லாண்டில் உள்ள பாடல்கள் எத்தனை?
பதின்மூன்று பாடல்களைக் கொண்ட பதிகம்

24. சேந்தனார் வாழ்ந்த இடம் எது?
தமிழ் நாட்டில் உள்ள செப்புறை என்னும் இடத்தில்

25. பல்லாண்டு பாடப்பட்ட சந்தர்ப்பம் யாது?
மார்கழித் திருவாதிரை தினத்தில் சிதம்பரச் தேர்ச்சில்லு மண்ணில் புதைந்து நகராது நின்றபோது "சேந்தா நீ பல்லாண்டு பாடினால் தேர் ஓடும்" என அசரீரி ஒலித்தது. அச்சந்தர்ப்பத்தில் சேந்தனரால் பல்லாண்டு பாடப்பட்டது.

26. சேந்தனார் சமைத்த உணவு எது?
தானியக் கூழ், களி

27. சோழ மன்னனது பூசையில் சிலம்பொலி கேட்காததன் காரணம் யாது?
இறைவன் சேந்தனாரிடம் கூழ்குடிக்கச் சென்றதனால்

28. திருவிசைப்பா என்பதன் பொருள் யாது?
இறைவனின் பெருமையைப் பாடுகின்ற தெய்வத்தன்மை பொருந்திய இசைப்பாடல்

29. கற்றவர் விழுங்கும் என்னும் திருவிசைப்பா பாடப்பட்ட தலம் எது?
திருவீழிமிழலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. திருவாசகம் என்பதன் பொருள் யாது?
தெய்வத்தன்மையுடைய மொழி என்பதாகும்

31. சாழல் என்பதன் பொருள் என்ன?
பெண்பிள்ளைகளின் ஒரு வகை விளையாட்டு

32. திருச்சாழல் என்பது என்ன?
திருவாசகத்தின் ஒரு பகுதி

33. தேவாரம் என்பதன் பொருள் யாது?
இறைவனுடைய மாலை என்பதாகும்

34. பெரிய புராணம் எத்தனை அடியார்களின் வரலாற்றைக் கூறுகின்றது?
63 தனி அடியார்களினதும், 9 தொகையடியார்களினதும்

35. சிவனடியார் பெருமை கூறும் புராணம் எது?
பெரியபுராணம்

36. பெரிய புராணத்தின் நாயகன் யார்?
சுந்தரமூர்த்தி நாயனார்

37. திருவாசகத்தை மாணிக்க வாசகர் கூற எழுதியது யார்?
சிவபெருமான்

38. பாலுக்கு அழுத பாலகன் யார்?
உபமன்யு

39. பஞ்சபுராணத்தில் இறுதியாகப் பாடப்படுவது எது?
பெரிய புராணம்

40. திருமுறைகள் ஓலைச் சுவடிகளாக எங்கே வைக்கப் பட்டிருந்தன?
சிதம்பரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. திருச்சாழல் என்னும் பாடல் பகுதி எந்தத் திருமுறையில் உள்ளது?
எட்டாவது திருமுறையில்

42. திருமூலர் கூறும் ஈரெழுத்து மந்திரம் யாது?
சிவ சிவ என்பதாகும்

43. பன்னிரு திருமுறைகளையும் பாடியவர் தொகை யாது?
இருபத்தேழு

44. உத்தம சோழ பல்லவன் என அழைக்கப்பட்ட திருமுறை ஆசிரியர் யார்?
சேக்கிழார்

## திருமுறை அட்டவணை

| | | |
|---|---|---|
| 1ம், 2ம், 3ம் திருமுறைகள் | தேவாரம் | திருஞான சம்பந்தர் |
| 4ம், 5ம், 6ம் திருமுறைகள் | தேவாரம் | திருநாவுக்கரசு நாயனார் |
| 7ம் திருமுறை | தேவாரம் | சுந்தரமூர்த்தி நாயனார் |
| 8ம் தீருமுறை | திருவாசகம் | மாணிக்கவாசகர் சுவாமிகள் |
| | திருக்கோவையார் | |
| 9ம் திருமுறை | திருவிசைப்பா | திருமாளிகைத் தேவர் சேந்தனார், கண்டராதித்தர், பூந்துருத்திகாட நம்பி, வேணாட்டடிகள், திருவாலிய மூதனார், புருடோத்தமநம்பி, சேதிராயர் |
| | திருப்பல்லாண்டு | சேந்தனார் |
| 10ம் திருமுறை | திருமந்திரம் | திருமூலநாயனார் |
| 11ம் திருமுறை | | பன்னிருவர் பாடியது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11ம் திருமுறை

| | |
|---|---|
| i) திருவாலவாயுடையார்(சிவபிரான்) | திருமுகப் பாசுரம் |
| | திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம். |
| ii) காரைக்கால் அம்மையார் | திருவிரட்டை மணிமாலை |
| | அற்புதத் திருவந்தாதி |
| | மூத்த திருப்பதிகம் |
| iii) ஐயடிகள் காடவர் கோன் | ஷேத்திரத் திருவெண்பா |
| | பொன்வண்ணத்தந்தாதி |
| iv) சேரமான் பெருமாள் நாயனார் | திருவாரூர் மும்மணிக்கோவை |
| | திருக்கைலாய ஞான உலா |
| | கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி |
| | திருவீங் கோயமலை எழுபது |
| | திருவெழு கடற்றிருக்கை |
| v) நக்கீர தேவ நாயனார் | பெருந்தேவ பாணி |
| | கோபப்பிரசாதம். காரெட்டு |
| | போற்றித் திருக்கலி வெண்பா |
| | திருமுருகாற்றுப்படை |
| | திருக்கண்ணப்ப தேவர் திருமறம் |
| vi) கல்லாடனார் | திருக்கண்ணப்பதேவர் திருமறம் |
| | மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை |
| vii) கபில தேவர் | சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை |
| | சிவபெருமான் திருவந்தாதி |
| viii) பரணதேவர் | சிவபெருமான் திருவந்தாதி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ix) இளம்பெருமானடிகள் | சிவபெருமான் திரு மும்மணிக்கோவை |
| x) அதிராவடிகள் | மூத்த பிள்ளையார் திரு மும்மணிக்கோவை |
| xi) பட்டினத்தடிகள் | கோயில் நான்மணிமாலை<br>திருக்கழுமல மும்மணிக்கோவை<br>திருவிடை மருதூர் மும்மணிக்கோவை<br>திருவேகம்ப முடையார் திருவந்தாதி<br>திருவொற்றியூர் ஒரு பா ஒரு பஃது |
| xii) நம்பியாண்டார் நம்பி | திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை<br>கோயில் திருப்பண்ணியர் திருவிருத்தம்<br>திருத்தொண்டர் திருவந்தாதி<br>ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி<br>ஆளுடைய பிள்ளையார் திருச்சன்னை விருத்தம்<br>ஆளுடைய பிள்ளையார் திரு மும்மணிக்கோவை<br>ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை<br>ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை<br>திருநாவுக்கரசு நாயனார் திருஏகாதச மாலை |
| 12ம் திருமுறை | -பெரியபுரணம் - சேக்கிழார் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. சைவசித்தாந்தம்

**01. சைவ சித்தாந்த சாத்திரங்கள் எத்தனை?**
பதினான்கு

**02. சித்தாந்த சாத்திரங்கள் வேறு எப்பெயரால் அழைக்கப்படும்?**
மெய்கண்ட சாத்திரங்கள்

**03.**

| மெய்கண்ட சாத்திரங்கள் | பாடியவர்கள் |
|---|---|
| 1. திருவுந்தியார் | திருவியலூர் உய்யவந்த தேவர் |
| 2. திருக்காளிற்றுப்படியார் | திருக்கடவூர் உய்ய வந்ததேவர் |
| 3. சிவஞானபோதம் | மெய்கண்ட தேவநாயனார் |
| 4. சிவஞான சித்தியார் | அருணந்தி சிவாச்சாரியார் |
| 5. இருபா இருப∴து | அருணந்தி சிவாச்சாரியார் |
| 6. உண்மை விளக்கம் | மனவாசகங்கடந்த தேவநாயனார் |
| 7. சிவப்பிரகாசம் | உமாபதி சிவாச்சாரியார் |
| 8. திருவருட்பயன் | |
| 9. வினாவெண்பா | |
| 10. போற்றிப் ப∴றொடை | |
| 11. கொடிக்கவி | |
| 12. நெஞ்சுவிடுதூது | |
| 13. உண்மை நெறி விளக்கம் | |
| 14. சங்கற்ப நிராகரணம் | |

**04. சதகமணிக்கோவை என்னும் நூல் யாரால் எழுதப்பட்டது?**
மறைஞான சம்பந்தர் அவர்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**05. சந்தான சாரியார்கள் எத்தனை வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளார்கள்?**

இருவகையாக அவை

i) அகச்சந்தானாச் சாரியார் ii) புறச்சந்தானாச்சாரியார்

**06. அகச்சந்தானாச் சாரியார்கள் யாவர்?**

திருநந்தி தேவர், சனற்குமாரர், சதத்தியஞான தரிசனிகள், பரஞ்சோதியார்

**07. புறச்சந்தானாச் சாரியார்கள் யாவர்?**

மெய்கண்டதேவர், அருணந்தி சிவாச்சாரியார் மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார்

**08. மெய்கண்ட சாத்திரங்களைப் பாடியருளியவர்களை வேறு எப்பெயர் கொண்டு அழைப்பர்?**

திருக்கைலாய பரம்பரைச்சந்தானாச் சாரியார்கள்

**09. திருவுந்தியர், திருக்களிற்றுப்படியார், எத்தனையாம் நூற்றாண்டில் தோன்றியது?**

கி.பி 12ம் நூற்றாண்டில்

**10. கி.பி 13ம் நூற்றாண்டில் தோன்றிய மெய்கண்ட சாத்திரங்கள் எவை?**

சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபா இருப..்.து.

**11. சித்தர்ந்த சாஸ்த்திர அட்டகம் என்பது என்ன?**

உமாபதிசிவாச்சாரியாரால் எழுதப்பட்ட எட்டு நூல்கள் இவை கி.பி. 14ம் நூற்றாண்டில் தோன்றியவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**12. திருவுந்தியார் எத்தனை செய்யுள்களைக் கொண்டது?**
45

**13. திருக்களிற்றுப்படியார் எத்தனை வெண்பாக்களை உடையது?**
நூறு வெண்பாக்களைக் கொண்டது

**14. திருக்களிற்றுப்படியார் எனும் பெயர் ஏன் ஏற்பட்டது?**
பொன்னம்பலத்திலுள்ள திருக்களிற்றுப் படிகளில் வைக்கப்பட்டுப் பாராட்டப்பட்டதால்.

**15. சிவஞான சித்தியார் எத்தனை பெரும் பிரிவுகளை உடையது?**
பரபக்கம், சுபபக்கம் என்பன.

**16. இருபா இருபது நூலில் கூறப்பட்டுள்ளது யாது?**
ஆணவத்தின் எட்டு இயல்பும் மாயையின் ஏழு இயல்பும், கா்மத்தின் 6 இயல்புகளையும் 20 செய்யுட்களில் கூறுகின்றது.

**17. கொடிக்கவி எத்தனை வெண்பாக்களால் ஆனது?**
04 வெண்பாக்களால்

**18. சக்தி பின்னமிலான் எங்கள் பிரான் எனக்குறிப்பிடும் சித்தாந்த நூல் எது?**
திருவருட்பயன்

**19. வேதாந்தம் தெளிவாம் சைவ சித்தாந்தம் எனக்குறிப்பிடும் நூல் எது?**
சிவப்பிரகாசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. **மெய்கண்ட தேவரின் குரு யார்?**
அருணந்தி சிவாச்சாரியார்

21. **சகல ஆகம பண்டிதர் என்று அழைக்கப்பட்ட சந்தான குரவர் யார்?**
அருணந்திசிவாச்சாரியார்

22. **மெய்கண்ட தேவரின் மாணவர் தொகை எவ்வளவு?**
49

23. **பெற்றான் சாம்பான் என்ற விறகு வெட்டிக்கு முத்தி கொடுத்தவர் யார்?**
உமாபதி சிவாச்சாரியார்

24. **பட்டகட்டையில் பகற்குருடு போகிறது என்று உமாபதி சிவத்தைக் கண்டித்தவர் யார்?**
மறைஞான சம்பந்தர்

25. **கடவுளின் இருநிலைகளைப் பற்றிக் கூறும் நூல் எது?**
சைவ சித்தாந்தம் (தடத்த இலக்கணம், சொரூபலக்கணம்)

26. **மெய்கண்டதேவரின் இயற்பெயர் என்ன?**
சுவேதவனப்பெருமான்

27. **சிவஞான போதம் எத்தனை சூத்திரங்களைக் கொண்டது?**
பன்னிரண்டு

28. **அருணந்தி சிவாச்சாரியாரின் இயற்பெயர் என்ன?**
சதாசிவ சிவாச்சாரியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**29. கொற்றவன்குடி முதலியார் என அழைக்கப்பட்ட சந்தானகுரவர் யார்?**
உமாபதி சிவாச்சாரியார்

**30. சிதம்பரத்தில் ஏறாது நின்ற கொடியை ஏற்றப் பாடப்பட்ட சித்தாந்த நூல் எது?**
கொடிக்கவி

**31. திருநந்திதேவரின் மாணாக்கர் எத்தனை பேர்?**
எட்டு

**32. சதசத்தாக விளங்குவது எது?**
உயிர்

**33. மெய்கண்ட தேவரின் குருபூசைத் தினம் எது?**
ஐப்பசி சோதி

**34. மெய்கண்ட தேவரினால் எழுதப்பட்ட தமிழ் நூல் எது?**
சிவஞானபோதம்

**35. மெய்கண்ட தேவரின் தந்தை தாய் பெயர் யாது?**
தந்தை - அச்சுதகளப்பாளர்
தாய் - மங்களாம்பிகை

**36. அச்சுதகளப்பாளரின் குரு யார்?**
சகலாகம பண்டிதர் (அருணந்திசிவாச்சாரியார், சதாசிவ சிவாச்சாரியார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. சைவ நாற்பாதங்கள்

**01. சைவ நாற்பாதங்கள் எவை?**

சரியை, கிரியை, யோகம், ஞானம்

**02. சைவநாற்பாதங்கள் என்றால் என்ன?**

சிவபெருமான் திருவடியை அடைதற்குரிய நான்கு மார்க்கங்கள்.

**03. சைவநாற்பாதங்களின் மறுபெயர்கள் என்ன?**

சைவநன்னெறிகள், சைவநாற்படிகள், சிவ புண்ணியங்கள்.

**04. ஆன்மாக்களுக்கு முத்தி எப்போது கிடைக்கும்?**

சமய நெறியில் நின்று மலங்கள் நீங்கும் போது

**05. யோக நெறிக்கு வேறு என்ன பெயர்?**

சகமார்க்கம்

**06. சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நெறியில் நிற்பவர்கள் அடையும் முத்தி யாது?**

| | | | |
|---|---|---|---|
| சரியை | - | சாலோகம் | (நாவுக்கரசர்) |
| கிரியை | - | சாமீபம் | (சம்பந்தர்) |
| யோகம் | - | சாரூபம் | (சுந்தரர்) |
| ஞானம் | - | சாயுச்சியம் | (மாணிக்கவாசகர்) |

**07. சைவ நாற்பாதங்களாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன எவ் மார்க்கங்கள் என அழைக்கப்படும்?**

| | | |
|---|---|---|
| சரியை | தாசமார்க்கம் | (அடிமை நெறி) |
| கிரியை | சற்புத்திரமார்க்கம் | (மகன் தந்தை நெறி) |
| யோகம் | சகமார்க்கம் | (தோழமை நெறி) |
| ஞானம் | சன்மார்க்கம் | (ஞான நெறி) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. பலனை எதிர்பாராது செய்யும் கிரியை யாது?
நிஸ்காமியக்கிரியை

09. இறைவனைத் தோழனாகக் கொண்டு பக்தி செய்யும் முறை எது?
யோக மார்க்கம்

10. சரியை வழிபாட்டினால் முத்தியடைந்த நாயன்மார்கள் யார்?
திருநாவுக்கரசு நாயனார், திலகவதியார், முருகநாயனார், சங்கிலியார், நமிநந்தியடிகள், கணம்புல்லநாயனார், அறிவாட்டாய நாயனார்.

11. கிரியை வழிபாட்டில் முத்தியடைந்த நாயன்மார்கள் யார்?
திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், சண்டேசுர நாயனார், பூசலார் நாயனார், புகழ்ச்சோழ நாயனார்

12. இறைவனைத் தந்தையாகவும், ஆன்மா மகனாகவும் பாவனை செய்யும் மார்க்கம் எது?
சற்புத்திர மார்க்கம்

13. கிரியை என்னும் சொல்லின் பொருள் யாது?
செயல்

14. சாயுச்சிய முத்தியடைவோர் கடைப்பிடிக்கும் மார்க்கம் எது?
சன்மார்க்கம்

15. ஞானம் கைகூட யாரின் அருள் வேண்டும்?
சற்குரு

16. யோக நெறியின் நான்கு படிகளும் எவை?
யோகத்தில் சரியை, யோகத்தில் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில் ஞானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13.சமய குரவர்கள்

## I. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார்

**01. சமயகுரவர்கள் யார்?**

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்க வாசகர் சுவாமிகள்.

**02. தேவார முதலிகள் என அழைக்கப்பட்டவர்கள் யாவர்?**

திருஞான சம்பந்தர் திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார்

**03. திருஞான சம்பந்தரின் தாய் தந்தை பெயர் என்ன?**

தந்தை - சிவபாதவிருதயர்

தாய் - பகவதியார்

**04. திருஞான சம்பந்தர் வாழ்ந்த காலம் யாது?**

கி.பி. 7ம் நூற்றாண்டு

**05. பாண்டிய மன்னனுக்கு ஏற்பட்ட வெப்புநோயை நீக்க திருஞான சம்பந்தர் பாடிய தேவாரப்பதிகம் யாது?**

மந்திரமாவது நீறு....... (திருநீற்றுப்பதிகம்)

**06. பாண்டிய மன்னனின் மனைவி பெயர் என்ன?**

மங்கையற்கரசியார்

**07. தலையே நீ வணங்காய் எனும் தேவாரத்தைப் பாடியவர் யார்? பண் யாது?**

திருநாவுக்கரசர் பண்- சாதாரி

**08. திருஞான சம்பந்தர் தங்கியிருந்த குடிசைக்குத் தீவைத்தவர் யார்?**

சமணர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. **திருநீற்றின் உயர்வைப் பதிகமாகப் பாடியவர் யார்?**
திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

11. **சம்பந்தர் புனல்வாதம் புரிந்த இடம் எது?**
மதுரை

12. **ஞானசம்பந்தர் முதன் முதலில் பாடிய தேவாரம் யாது?**
தோடுடைய செவியன்

13. **தோடுடைய செவியன் எனும் பாடலின் பண், தலம் யாது?**
பண் - நட்டபாடை தலம் - சீர்காழி

14. **சம்பந்தர் புனல் வாதத்தின் போது ஏட்டிலே எழுதிய தேவாரம் எது?**
"வாழ்க அந்தணர்"

15. **சம்பந்தருக்கு முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச்சின்னம் என்பன எங்கே கிடைத்தன?**
திருநெல்வாயில் அரத்துறை எனும் தலத்திற்கு செல்கையில் மாறன்பாடி எனும் இடத்தில்

16. **பதினாறு வயதினிலே இறைவனடி சேர்ந்தவர் யார்?**
திருஞான சம்பந்தர்

17. **திருஞான சம்பந்தரின் குரு பூசைத் தினம் யாது?**
வைகாசி மூலம்

18. **திருஞான சம்பந்தர் பஞ்சாட்சரம் பொறிக்கப்பெற்ற பொற்றாளம் பெற்ற போது பாடிய பாடல் எது?**
மடையில் வாளை.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. திருஞான சம்பந்தர் பின்பற்றிய மார்க்கம் அடைந்த முத்தி யாது?

மார்க்கம் - கிரியை - சற்புத்திரமார்க்கம்

முத்தி - சாமீபம்

20. இலங்கையிலுள்ள எத்தலத்தை சிறப்பித்து சம்பந்தர் தேவாரம் பாடினார்?

திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம்

21. எப்பதிகத்தை ஓதும் அடியார்கள் வானில் அரசாள்வர் என ஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார்?

கோளாறு பதிகத்தை

22. சம்பந்தரின் மதுரைப்பயணத்தைத் தவிர்க்குமாறு புத்தி கூறியவர் யார்?

திருநாவுக்கரசர்

23. ஞானசம்பந்தர் பொற்றாளம் பெற்ற தலம் எது?

திருக்கோலக்கா

24. கோளாறு பதிகம் யாரால் பாடப்பட்டது?

ஞானசம்பந்தரால்

25. தோடுடைய செவியனாக விளங்குபவர் யார்?

சிவபெருமான்

26. சம்பந்தர் சமணருடன் சுரவாதம் புரிந்தபோது பாடிய பதிகம்?

"மந்திரமாவது நீறு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. சைவத்தின் காவலராக விளங்கும் சமயகுரவர் யார்?
ஞானசம்பந்தர்

28. நின்று சீர் நெடுமாறனின் கூனை மாற்றியவர் யார்?
ஞானசம்பந்தர்

29. "கடிதெனவந்து கரிதனை உரித்து........." என்ற பதிகம் எத்தலதின் மீது பாடப்பட்டது?
திருக்கோணேஸ்வரத்தின் மீது

30. "சமணரின் வஞ்சனைக்கு எல்லை இல்லை. நீரோ சிறுபிள்ளை" என்று யார் யாருக்கு கூறியது?
நாவுக்கரசர் ஞானசம்பந்தருக்கு

31. வேயுறு தோளிப்பங்கன்....... என்னும் தேவாரத்தின் பண் யாது?
பியந்தைக் காந்தாரம்

32. மங்கையற்க்கரசியாரின் இயற்பெயர் யாது?
மானி

33. முத்தமிழ் வித்தகராக விளங்கிய நாயனார் யார்?
ஞானசம்பந்தர்

34. ஞானசம்பந்தரின் தேவாரங்களின் தொகை யாது?
இன்றுள்ளவை 4137 1ம், 2ம், 3ம் திருமுறை முதற்பாடியது. தோடுடைய செவியன் இறுதியாகப் பாடியது - காதலாகிக் கசிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரின் மறுபெயர்கள் எவை?

முத்தமிழ் விரகர், சைவசிகாமணி, பாலறாவாயர், ஆளுடைய பிள்ளை, ஞானக்குழந்தை

36. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் செய்த அற்புதங்கள் எவை?

1. மூன்று வயதில் பொற்கிண்ணத்தில் ஊட்டிய திருமுலைப்பாலை உண்டமை
2. சிவபெருமானிடம் பொற்றாளம், முத்துப்பல்லக்கு, முத்துச்சின்னம்,முத்துக்குடை,முத்துப்பந்தர், உலவாக்கிழி, படிக்காசு பெற்றமை
3. வேதாரணியத்தில் வேதங்களினாலே பூட்டப்பட்டிருந்து திருநாவுக்கரசருடைய பதிகத்தினால் திறக்கப்பாடிய கதவு அடைக்கப்பாடியது
4. பாலை நிலத்தை நெய்தல் நிலமாகும் படி செய்தமை
5. சமணர்கள் எதிரிலே தேவாரத் திருவேட்டை நெருப்பிலே இட்டு எரியாமல் எடுத்தமை
6. பாண்டியனது கூன், சுரம் என்பவற்றைப் போக்கியமை
7. வைகையாற்றில் திருவேட்டைப் போட்டு எதிர் ஓடும் படிச் செய்தமை
8. புத்த நந்தியினுடைய தலையிலே இடிஇடிக்கச் செய்தது
9. தாமும் அடியார்களும் ஆற்றில் ஏறிய ஓடத்தை திருப்பதிகத்தினாலே கரை சேர்த்தது.
10. ஆண் பனைகளைப் பெண் பனைகளாக்கியது
11. விஷத்தினால் இறந்த செட்டியை உயிர்ப்பித்தமை
12. விஷத்தினால் இறந்த பெண்ணுடைய எலும்பைப் பெண்ஆக்கியது
13. தமது திருக்கல்யாணம் தரிசிக்க வந்தவர்கள் அனைவரையும் தம்மோடு அக்கினியிலே புகுவித்து முத்தியிலே சேர்த்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II திருநாவுக்கரசு நாயனார்

01. நாவுக்கரசு நாயனாரின் தாய் தந்தை பெயர் என்ன?
தந்தை புகழனார்
தாய் - மாதினியார்

02. நாவுக்கரசரின் ஊர் எது?
திருமுனைப்பாடி நாட்டிலே உள்ள திருவாமூர்

03. நாவுக்கரசரின் இயற்பெயர் யாது?
மருணீக்கியார்

04. நாவுக்கரசரின் சகோதரியின் பெயர் என்ன?
திலகவதியார்

05. நாவுக்கரசர் சைவ மதத்திலிருந்து எந்த மதத்துக்கு மாறினார்?
சமண மதத்திற்கு

06. சமண மதத்தில் நாவுக்கரசர் பெற்ற பெயர் யாது?
தருமசேனர்

07. நாவுக்கரசு நாயனாருக்கு உருவான நோய் என்ன?
சூலை நோய்

08. திலகவதியார் தம்பியாரை அழைத்துச்சென்ற ஆலயம் எது?
வீரட்டானேஸ்வரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. நாவுக்கரசு நாயனார் முதன்முதலில் பாடிய தேவாரம் எது?

"கூற்றாயினவாறு......................"

10. உழவாரப் படையாளி என்று அழைக்கப்படுபவர் யார்?

நாவுக்கரசு நாயனார்

11. சரியைத் தொண்டு புரிந்த நாயனார் யார்?

நாவுக்கரசு நாயனார்

12. நாவுக்கரசு நாயனாரை கல்லில் கட்டி கடலில் போட்டவர்கள் யார்?

சமணர்கள்

13. நாவுக்கரசு நாயனாரை கல்லில் கட்டி கடலில் போட்டபோது அவர்பாடிய தேவாரம் யாது? நடந்த அதியம் யாது?

சொற்றுனை வேதியன்

நடந்த அதிசயம் - கல் தெப்பமாக மிதந்தமை

14. காதலாகி கசிந்து என்ற தேவாரத்தின் பண் யாது?

கௌசிகம்

15. நாவுக்கரசு நாயனாரின் குருபூசைத் தினம் யாது?

சித்திரைச்சதயம்

16. கெடிலம் எனும் ஆற்றோரத்தில் அதிகை என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன் பெயர் யாது?

வீரட்டானேஸ்வரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. திருவாவடுதுறையில் வீற்றிருக்கும் இறைவன் பெயர் யாது?

செம்பொற்றியாகேசப் பெருமான்

18. அப்பூதியடிகளின் மனைக்கு எழுந்தருளிய நாயனார் யார்?

திருநாவுக்கரசு நாயனார்

19. நாவுக்கரசர் இறுதியாகப் பாடிய தேவாரப் பாடல் எது?

" எண்ணுகேன் என் சொல்லி.........."

20. மாசில் வீணையும் மாலை மதியமும் எனும் தேவாரத்தைப் பாடிய சந்தர்ப்பம் யாது?

சமணர்களின் தூண்டுதலின்பேரில் நாவுக்கரசரை பாண்டிய மன்னன் நீற்றறையில் அடைத்த போது?

22. திருத்தாண்டகம் பாடியவர் யார்?

நாவுக்கரசு நாயனார்

23. நாவுக்கரசுநாயனார் பின்பற்றிய மார்க்கம் அடைந்த முத்தி எது?

சரியை - மார்க்கம் (தாசமார்க்கம்)

முத்தி - சாலோகம்

24. நாவுக்கரசர் எனும் பெயரை அப்பருக்குச் சூட்டியவர் யார்?

சிவபெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. நாவுக்கரசர் முதல் தேவாரத்தை எத்தலத்தில் பாடினார்?
வீரட்டானேஸ்வரம்

26. நாவுக்கரசரை ஆட்கொள்ள இறைவன் அவருக்குக் கொடுத்த நோய் எது?
சூலைநோய்

27. நாவினுக் கருங் கலம் எது?
நமசிவாய

28. இறைவனால் நோய் கொடுத்து ஆட்கொள்ளப்பட்ட தேவார முதலியார் யார்?
திருநாவுக்கரசர்

29. படிக்காசு பெற்று பஞ்சம் தீர்த்த நாயனார் யாவர்?
திருஞானசம்பந்தர்
திருநாவுக்கரசர்

30. நாவுக்கரசர் சுண்ணாம்பு அறையில் எத்தனை நாள் இருந்தார்?
ஏழு நாட்கள்

31. கூற்றாயினவாறு விலக்ககலீர் என்ற தேவாரத்தின் பண் யாது?
கொல்லி

32. கூற்றுவன் என யாரைக் குறிப்பிடுவர்?
இயமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. பூவினுக்கு அருங் கலம் எது?

தாமரை

34. நாவுக்கரசரின் தோளில் இறைவன் பொறித்த இலச்சனை எவை?

சூலம், இடபம் என்பன

35. என் கடன் பணி செய்து கிடப்பதே எனக் கூறியவர் யார்?

நாவுக்கரசர்

36. பாம்பு கடியுண்ட சிறுவனை எழுப்ப அப்பர் பாடிய பதிகம் யாது?

"ஒன்று கொல்லாம் அவர் சிந்தை..........."

37. திருநாவுக்கரசரை அப்பரே அன அழைத்தவர் யார்?

திருஞான சம்பந்தர்

38. வேதங்களால் அடைக்கப்பட்ட திருமறைக்காட்டுக் கதவினைத் திறக்க அப்பர் பாடிய பதிகம் எது?

"பண்ணினேர் மொழியாள்............."

39. நாவுக்கரசர் கைலாயக்காட்சியை எங்கே தரிசித்தார்?

திருவையாற்றில்

40. நாவுக்கரசர் இறைவனிடம் எத்தலத்துக்கு போகும் போது பொதிச்சோறு பெற்றார்?

திருப்பைஞ்சீலி தலத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. உழவாரப்படையைப் கையில் வைத்திருக்கும் சமயகுரவர் யார்?
நாவுக்கரசர்

42. குனித்த புருவமும் எனத் தொடங்கும் தேவாரம் பாடிய தலம்?
சிதம்பரம்

43. அப்பன் நீ, அம்மை நீ ஐயனும் நீ எனக் கடவுளைக் குறிப்பிட்டவர் யார்?
திருநாவுக்கரசர்

44. சொற்கோ என அழைக்கப்படுபவர் யார்?
நாவுக்கரசர்

45. திருநாவுக்கரசரின் மறு பெயர்கள் எத்தனை?
அப்பர், தாண்டகவேந்தர், உழவாரப்படையாளி, வாகீசர், சொற்கோ, ஆளுடைய அரசு

46. நாவுக்கரசரின் பதிகங்கள் எத்தனை?
இன்றுள்ள பதிகம் - 312
இன்றுள்ள பாடல்கள் - 3066

47. நாவுக்கரசரின் பதிகங்கள் எத்தனையாம் திருமுறை?
4ம், 5ம், 6ம் திருமுறைகள்

48. நாவுக்கரசர் செய்தருளிய அற்புதங்கள் எவை?
1. சமணர்களால் 7 நாட்கள் சுண்ணாம்பு அறையில் பூட்டப்பட்டிருந்தும் வேகாது பிழைத்தது
2. சமணர்கள் உண்ணக்கொடுத்த நஞ்சுகலந்த பாற்சோற்றை உண்டும் இறவாது இருந்தமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சமணர்கள் ஏவிய மத யாணையினால் வலம் செய்து வணங்கப்பட்டமை
4. சமணர்கள் கல்லுடன் சேர்த்துக் கட்டி கடலினுள் போட்டபோது அக்கல்லே தோணியாக கரை சேர்ந்தமை
5. சிவபெருமானிடம் படிக்காசு பெற்றமை
6. வேதாரணியத்திலே வேதங்களால் பூட்டப்பட்ட கதவு திறக்கப்பாடியது
7. விஷம் தீண்டி இறந்த பிள்ளையை உயிர்ப்பித்தமை
8. காசிக்கு அப்பால் ஒரு குழத்தில் மூழ்கித் திருவையாற்றின் ஒரு வாவியின் மேலே தோன்றிக் கரையேறியமை

## இறைவனுக்கு கடன் கொடுத்தல்

எல்லாம் வல்லவரும், எங்கும் நிறைந்தவரும், நிகரற்றவரும், அன்பு மயமான இறைவனுக்கு எப்படிக் கடன் கொடுக்கலாம்? ஆம் இறைவனுக்குக் கொடுக்க வேண்டியது என்ன? ஏழைகளுக்கு இரங்கி எவன் உதவுகிறானோ அவன் இறைவனுக்கு கடன் கொடுக்கின்றான். வாங்கிய கடனை இறைவன் சரியான நேரத்தில் பன்மடங்காகத் திரும்பித் தந்தருள்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## III சுந்தர மூர்த்தி நாயனார்

01. சுந்தர மூர்த்திநாயனாரின் தந்தை தாய் பெயர் யாது?
தந்தை - சடையனார்
தாய் - இசைஞானியார்

02. சுந்தரமூர்த்தி நாயனாரின் இயற்பெயற் யாது?
நம்பியாரூரர்

03. சுந்தரர் பிறந்த ஊர் எது?
திருமுனைப்பாடி நாட்டிலே திருவாரூரிலே

04. சுந்தர மூர்த்தி நாயனார் யாரைத்திருமணம் செய்தார்?
பரவையார், சங்கிலியார்

05. பித்தாபிறை சூடி என்னும் தேவாரத்தின் பண் யாது?
இந்தளம்

06. எவ் ஆலயத்தில் செங்கட்டிகள் பொன்கட்டிகளாக மாறிய அற்புதம் நடைபெற்றது?
திருப்புகலூர் ஆலயத்தில்

07. சுந்தரமூர்த்தி நாயனார் முதன்முதலில் பாடிய தேவாரம் எது?
பித்தாப்பிறை சூடி................

08. தம்பிரான் தோழர் என அழைக்கப்பட்டவர் யார்?
சுந்தரமூர்த்தி நாயனார்

09.. பெரிய புராணத்தின் நாயகன் யார்?
சுந்தர மூர்த்தி நாயனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. சுந்தரரின் குருபூசைத் தினம் யாது?
ஆடிச் சுவாதி

11. பித்தன் என்பதன் பொருள் யாது?
பேரருள் உடையவன்

12. பித்தா என இறைவனை அழைத்தவர் யார்?
சுந்தரமூர்த்தி நாயனார்

13. ஆற்றிலே இட்ட பொன்னைக் குளத்திலே எடுத்த நாயனார் யார்?
சுந்தர மூர்த்தி நாயனார்

14. சுந்தர மூர்த்தி நாயனாரின் தேவாரங்கள் எத்தனையாம் திருமுறை?
7ம் திருமுறை

15. சுந்தரரைத் தடுத்தாட் கொண்டவர் யார்?
சிவபெருமான்

16. சுந்தர மூர்த்தி நாயனார் யாரால் வளர்க்கப்பட்டார்?
நரசிங்க முனையர் என்னும் மன்னனால்

17. சுந்தரர் பின்பற்றிய மார்க்கம் அடைந்த முத்தி யாது?
யோக நெறி மார்க்கம்
அடைந்த முத்தி - சாரூபம்

18. பரவையார் சிறப்பாகக் கொண்டாடிய புண்ணிய நாள் எது?
பங்குனி உத்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. சுந்தரரை இறைவன் எவ்விடத்தில் தடுத்தாற் கொண்டார்,
திருமணப்பந்தலில்

20. மருவார் கொன்றை மதிசூடி எனும் தேவாரத்தை பாடியவர் யார்?
சுந்தர மூர்த்தி நாயனார்

21. 18 வயதில் முத்தியடைந்தவர் யார்?
சுந்தரமூர்த்தி நாயனார்

22. சுந்தரரின் மொத்தப்பாடல்கள் எத்தனை?
இன்றுள்ளவை பதிகம் - 100, பாடல் - 1036

23. சுந்தரரின் மறு பெயர்கள் எவை?
நம்பியாரூரர், ஆளுடைய நம்பி, தம்பிரான் தோழர், சேரமான் தோழர், ஆலாலசுந்தரர்

24. சுந்தரமூர்த்தி நாயனார் இடத்தில் விளங்கிய அற்புதங்கள் எவை?
1. செங்கற்களை பொன்கற்காளாகப் பெற்றுக்கொண்டமை
2. காவேரியாறு பிரிந்து வழிவிடச் செய்தமை
3. ஆற்றிலே போட்ட பொன்னைக் குளத்திலே எடுத்தமை
4. முதலை விழுங்கிய பிராமணப்பிள்ளையை முதலை வாயினின்றும் மீட்டுக் கொடுத்தமை
5. வெள்ளையானையில்ஏறிக்கொண்டு திருக் கைலாசத்திற்குச் சென்றமை

25. முற்பிறப்பில் திருக்கைலையில் இறைவனின் தொண்டராக இருந்த நாயனார் யார்?
சுந்தரமூர்த்தி நாயனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IV மாணிக்கவாசக சுவாமிகள்

01. மாணிக்க வாசகரின் தாய் தந்தை பெயர் யாது?
தந்தை - சம்புபாதாசிரியர்
தாய் - சிவஞான வதியார்

02. மாணிக்க வாசகரின் இளமைப்பெயர் யாது?
திருவாதவூரர்

03. மாணிக்கவாசகர் அவதரித்த ஊர் எது?
பாண்டிய நாட்டிலே உள்ள திருவாமூரில்

04. மாணிக்க வாசகரை இறைவன் எங்கே ஆட்கொண்டார்?
திருப்பெருந் துறையில் குருந்த மர நிழலில்

05. திருவாசகத்தை மாணிக்க வாசகர் கூற ஏட்டில் எழுதியவர்?
சிவபெருமான்

06. மாணிக்கவாசகரால் பாடப்பட்ட நூல்கள் எவை?
திருவாசகம், திருக்கோவையார்

07. திருவெம்பாவை எத்தனை பாடல்களைக் கொண்டது?
எத்தலத்தில் பாடப்பட்டது?
20 பாடல்களைக் கொண்டது
திருவண்ணாமலை தலத்தில் பாடப்பட்டது

08. மாணிக்க வாசகரின் குரு பூசைத் தினம் யாது?
ஆனி மகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. மாணிக்க வாசக சுவாமிகள் எந்த அரசனுக்கு மந்திரியாகக்கடமை புரிந்தார்?
அரிமர்த்தன பாண்டிய மன்னனுக்கு

10. தென்னவன் பிரமராயன் என அழைக்கப்பட்டவர் யார்?
மாணிக்க வாசக சுவாமிகள்

11. பாண்டிய நாட்டின் தலைநகராக விளங்கிய நகரம் எது?
மதுரை

12. சிவன் சித்தராக வந்து பாண்டிய நாட்டை ஆண்ட மன்னன் யார்?
அபிடேக பாண்டியன்

13. மதுரையில் திருவாலவாய்க் கோவிலிலுள்ள இறைவன் பெயர் யாது?
சுந்தரேசப் பெருமான்

14. பாண்டிய மன்னனிடம் முதல் மந்திரியாகப் பணிசெய்த சமய குரவர் யார்?
மாணிக்கவாசகர்

15. மாணிக்க வாசகர் வாழந்த ஆண்டுகள் எத்தனை?
32

16. தென்னவன் பிரமராயன் என்ற பட்டத்தின் பொருள் யாது?
பாண்டிய மன்னனின் பிராமண அரசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**17. மாணிக்க வாசகரின் அற்புதங்களைத் தருக?**

1. புத்தர்களை வாதில் வென்று ஊமைகளாக்கிப் பின்பு ஊமைநீக்கிச் சைவர்களாக்கியமை
2. பிறவி முதல் ஊமையாய் இருந்த ஒரு பெண்ணை ஊமை நீக்கிப் புத்தர்கள் வினாவிய வினாக்களுக்கு விடை கூறும்படி செய்தமை
3. ஊமைப் பெண்ணை பேச வைத்து புத்தர்கள் வினாவிய வினாக்களுக்கு விடை கூறச் செய்தமை
4. தம்முடைய திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் சிவபெருமானே எழுந்தருளி வந்து எழுதும் படி பெற்றுக் கொண்டமை
5. எல்லாருங் காண கனக சபையினுள்ளே சிவத்துடன் கலந்தமை

**18. ஞான நெறி நின்ற சமய குரவர் யார்?**

மாணிக்க வாசகர்

**19. அறுபத்து மூன்று நாயன் மாருள் அடக்கப்படாத சமயகுரவர் யார்?**

மாணிக்கவாசகர்

**சமயாசாரியார் முத்தியடைந்த நாள்**

சித்திரைச் சதயம் அப்பர் சிறந்தவை காசிமூலம்
அத்தரைப் பணிசம் பந்தர் ஆனிமா மகத்திலந்தம்
முத்தமிழ் வாத வூரர் முதியால் லாடி தன்னில்
சுத்தமான் சோதி நாளில் சுந்தரர் கயிலை சேர்ந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 வேதங்கள்

**01. சைவத்தின் முதல் நூல்கள் எவை?**

வேதங்கள்

**02. வேதங்கள் எம் மொழியில் உள்ளன?**

வட மொழியில்

**03. வேதத்தின் மறு பெயர்கள் எவை?**

மறை, அபௌருசேயம், சுருதி, எழுதாக்கிழவி

**04. வேதங்களில் ஒவ்வொரு பெயர்களிற்குரிய காரணங்களைத் தருக?**

வேதம்:- மனித அளவிற்கு எட்டாத உயர்ந்த உண்மகளைக் கூறும் நூல்

மறை :- உயர்ந்த தத்துவங்களைத் தெரிவிக்கும் நூல்

அபௌருசேயம் :- மனிதனால் ஆக்கப்படாதவை

சுருதி :- பல காலமாகச் செவி வழியில் கேட்கப்பட்டு வந்தவை

எழுதாக்கிழவி :- எழுதப்படாமல் இருந்தவை

**05. நால் வேதங்களும் எவை?**

இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்

**06. மிகத் தொன்மையான இவ் வேதங்கள் யாரால் அருளப்பட்டவை?**

கடவுளால் அருளப்பட்ட வேதங்களை முனிவர்கள் உலகிற்கு வழங்கினர். (செவி வழியாக வந்தவை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. வேதங்களைத் தொகுத்தவர் யார்?**
வேதவியாசர்

**08. வேதங்களில் உள்ள 03 காண்டங்களும் எவை?**
ஞான காண்டம் (அறிவு)
கர்ம காண்டம் (தொழில்)
உபாசன காண்டம் (வாழ்த்து)

**09. வேள்விகளில் பயன்படும் வேதங்கள் எவை?**
இருக்கு
யசுர் "திரயி" எனப்படும்
சாமம்

**10. வேதத்தின் உட்பிரிவுகள் எவை?**
சங்கிதைகள், பிராமணங்கள், ஆரணியங்கள், உபநிடதங்கள்

**11. யசுர்வேதத்தின் 2 பகுதிகளும் எவை?**
சுக்கில யசுர் வேதம்
கிருஷ்ண யசுர்வேதம்

**12. இருக்கு வேதத்தின் சிறப்புக்கள் எவை?,**
வேதங்களில் முதலாவது
உலகில் தோன்றிய முதலாவது இலக்கியம்
பாட்டுக்களை மட்டும் கொண்டது

**13. இருக்கு என்பதன் பொருள் யாது?**
பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**14. இருக்கு வேதப் பாடல்களைப் பாடியோர் யாவர்?**

முதல் 7 மண்டலங்களும் விசுவாமித்திரர், வாமதேவர், அத்தரி, பரத்துவாசர், வசிட்டர், என்போரால் பாடப்பட்டது. மிகுதிப்பகுதி பல கவிகளால் பாடப்பட்டது.

**15. இருக்கு வேத அமைப்பை விளக்குக?**

10 மண்டலங்கள்

1025 சூத்திரங்கள்

10380 மந்திரங்கள்

153826 சொற்கள்

**16. இருக்கு வேதத்திலுள்ள தெய்வங்களின் பெயர்களைத் தருக?**

இந்திரன், அக்கினி, சூரியன், உருத்திரன், வருணன், உசஸ்

**17. மந்திரங்களின் தோற்றத்திற்கு மூலம் எது?**

இருக்கு வேதம்

**18. வேதப்பாடல்களின் 3 பகுதிகளும் எவை?**

அழைத்தல், துதித்தல், வேண்டல்

**19. இருக்கு வேத வழிபாட்டு முறையை பிரித்தும் ஒழுங்கு படுத்தியும் கூறும் வேதம் எது?**

யசுர் வேதம்

**20. ஸ்ரீ ருத்திர மந்திரங்கள் காணப்படும் வேதம் எது?**

யசுர் வேதம்

**21. ஸ்ரீ ருத்திர மந்திரங்களுள் அடங்குபவை எவை?**

பஞ்சாட்சர மந்திரம், பிரணவ மந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. **தெய்வங்களிற்குப் பல பெயர்களைக் கூறும் உரை நடை வேதம் எது?**
யசுர் வேதம்

23. **உள்ளம் உருகும் இசையை உடைய வேதம் எது?**
சாமவேதம்

24. **சாமம் என்பதன் பொருள் யாது?**
வேண்டும் பொருளைப் பெற்றுக் கொடுத்தல்

25. **சாமவேதப் பாடல்களில் இருக்கு வேதத்திலிருந்து பெறப்பட்டவை எத்தனை?**
1474 பாடல்கள்

27. **சாம வேதத்திலுள்ள மொத்தப் பாடல்கள் எத்தனை?**
1549 பாடல்கள்

28. **வழிபாட்டில் இசையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வேதம் எது?**
சாம வேதம்

29. **சாம கானம் வாசித்து இறைவனை மகிழ்வித்து உயிர்தப்பியவன் யார்?**
இராவணன்

30. **காலத்தின் அருமை, பிரமச்சாரியம், செல்வத்தைப் பெருக்கல், பூமி விருத்தி, போர்முறை, நோய்நீக்கம், தீமை விலக்கல், வயப்படுத்தல் என்பவை பற்றிக் கூறும் வேதம் எது?**
அதர்வண வேதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. அதர்வண வேதத்தின் மறு பெயர்கள் எவை?
அதர்வாங்கிராஸ், பிருது வாங்கிரஸ், பிரம்ம வேதம்

32. காலத்தால் பிற்பட்ட வேதம் எது?
அதர்வண வேதம்

33. அதர்வணம் என்பதன் பொருள் யாது?
மாந்திரீக விதிகளின் அறிவு என்பதாகும்

**நினைத்தது நடக்க**

ஞாயிற்றுக்கிழமைகளில் சூரியன் மறையும் நேரத்திற்கு முன்பு ராகு காலத்தில் துர்க்கையை வழிபட்டு எலுமிச்சம் பழத்தில் நெய்விளக்கு ஏற்றினால் நினைத்தது நடக்கும் என்பது நம்பிக்கை.

**முருகனுக்குரிய நைவேத்தியங்கள்**

திங்கட்கிழமை - வெண்பொங்கல்
செவ்வாய்க்கிழமை - எலுமிச்சம் சாதம்
புதன்கிழமை - வெள்ளை உழுத்தம் பருப்புச்சாதம் or தோல் நீங்காத பச்சை பருப்புப் பாயாசம்.
வியாழக்கிமை - தயிர்சாதம்
வெள்ளிக்கிழமை - கற்கண்டு சாதம் or சக்கரைப்பொங்கல்
சனிக்கிழமை - சாம்பார் சாதம்
ஞாயிற்றுக்கிழமை - தேங்காய் சாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 சைவ ஆகமங்கள்

01. **சைவத்தின் சிறப்பு நூல்களாக அமைவன எவை?**
ஆகமங்கள்

02. **ஆகமம் என்பதன் பொருள் யாது?**
அ என்பது சிஞானம் எனவும், க என்பது மோட்சம் எனவும், ம என்பது மலநாசம் எனவும் பொருள் கொண்டு சித்த மலம் அறுவித்து சிஞானத்தை தோற்றுவித்து மோட்சத்தைக் கொடுப்பது ஆகமம் எனப்படும்.

03. அ என்பது பாசம் எனவும், க என்பது பசு எனவும் ம என்பது பதி எனவும் பொருள் கொண்டு ஆகமம் என்றால் முப்பொருள்களையும் உணர்த்தும் நூல் என்றும் பொருள் கூறுவர்.

03. **சிவனால் தோற்றுவிக்கப்பட்டாதால் சைவாகமங்கள் அழைக்கப்படும்?**
சிவாகமங்கள்

04. **ஆகமங்கள் எங்கிருந்து தோன்றின?**
சிவபெருமானின் ஈசான முகத்திலிருந்து

05. **சிவாகமங்களின் மறு பெயர்களைத் தருக?**
மந்திரம், தந்திரம், சித்தாந்தம்

06. **சிவாமங்களின் இரு பிரிவுகளும் எவை?**
மூலாகமங்கள், உபாகமங்கள்

07. **மூலாமங்கள் எத்தனை?**
காமிகம் முதல் வாதுளம் வரை 28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08. உபாகமங்கள் எத்தனை?**

மிருகேந்திரம் முதல் விசுவான்மிகம் ஈறாக 207

**09. ஆகமவழிபாட்டில் முக்கியமானவை எவை?**

இரகசியம், மந்திரம், ஆலயம், மூர்த்தி

**10. தமிழ் ஆகமம் என அழைக்கப்படுவது எது?**

திருமந்திரம்

<u>ஆண்டவனுக்கு நடாத்தப்பெறும் அபிஷேகங்களால் வரும் பயன்கள்.</u>

| | | | |
|---|---|---|---|
| 01. | சந்தனாதித் தைலம் | - | சுகம் தரும் |
| 02. | நறுமண திருமஞ்சனப்பொடி | - | கடன், நோய் தீரும் |
| 03. | பஞ்சாமிர்தம் | - | உடல் வலிமை தரும் |
| 04. | பால் | - | நீண்ட ஆயுள் |
| 05. | தயிர் | - | நன்மக்கள் பேறு |
| 06. | தேன் | - | சுகம் |
| 07. | இளநீர் | - | உயர் பதவி |
| 08. | சந்தனம் | - | |
| 09. | கருப்பஞ்சாறு | - | ஆரோக்கியம் |
| 10. | நீர் | - | சாந்தி |

**இலை விபூதி**

திருச்செந்தூர் முருகன் திருக்கோயில் பன்னீர் இலையில் விபூதிப்பிரசாதம் வழங்குவது ஒரு தனிச் சிறப்பு. வேதகணங்களெல்லாம் இங்கு வந்து பன்னீர் மரங்களாக நின்று செந்தில் ஆண்டவனை வழிபடுவதாக ஐதீகம். இதற்கேற்ப ஏராளமான பன்னீர் மரங்கள் உள்ளன. விசுவாமித்திர முனிவர் இங்கு வந்து முருகப் பெருமானை வழிபட்டு இலை விபூதிப்பிரசாதம் பெற்று குன்ம நோய் நீங்கியதாக புராணம் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. முப்பொருள்கள்

**01. சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள்கள் எவை?**
பதி, பசு, பாசம்

**02. பதி, பசு, பாசம் என்பகர் மூன்றில் பதியினை போற்பசு பாசம் அநாதி எனக்கூறும் நூல் எது?**
திருமந்திரம்

**03. இறைவனின் எண் குணங்கள் எவை?**
தன்வயத்தராதல், தூய உடம்பினராதல், இயற்கைஉணர்வினராதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களினின்று நீங்குதல், பேரருள் உடமை, முடிவிலாற்றல், உடமை வரம்பில் இன்பமுடைமை

**04. இறைவனின் மூவகைத் திருமேனிகள் எவை?**
அருவம், உருவம், அருவுருவம்

**05. அருவத் திருமேனியுடைய பொழுது பதி எவ்வாறு அழைக்கப்படுகின்றார்?**
அருவம் என்பது உருவம் எதுவுமற்ற நிலை.
இந்நிலைமையில் பதி, சிவம் என அழைக்கப்படுகின்றார்.

**06. அருவுருவத்திருமேனியுடைய பொழுது பதி எவ்வாறு அழைக்கப்படுகின்றார்?**
சதாசிவம் என

**07. உருவத்திருமேனியுடைய பொழுது எவ்வாறு அழைக்கப் படுகின்றது?**
மகேஸ்வரன் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08. ஐந்தொழில்கள் எவை?**

| | | |
|---|---|---|
| படைத்தல் | - | பிரம்மா |
| காத்தல் | - | திருமால் |
| அழித்தல் | - | உருத்திரன் |
| மறைதல் | - | மகேஸ்வரன் |
| அருளல் | - | சதாசிவன் |

**09. பதியின் இயல்பு பற்றி திருவருட்பயன் எவ்வாறு கூறுகின்து?**

அகர உயிர்போல அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கும் நிறைந்து

**10. ஐந்தொழில்களும் குறிக்கும் தத்துவங்களை விளக்குக.**

| | | |
|---|---|---|
| படைத்தல் | - | தனு, கரண, புவன, போகங்களைத் தோற்றுவித்தல் |
| காத்தல் | - | தோற்றுவிக்கப்பட்டவற்றை அகற்றுவ தற்குரிய கால எல்லை வரை நிலைபெறுமாறு காப்பது. |
| அழித்தல் | - | படைத்தல் யாவற்றையும் சில காலத்திற்கு இளைப்பாறச் செய்யும் முகமாக ஒடுக்குதல். |
| மறைத்தல் | - | உயிர்களை இருவினைப்பயன்களாகிய இன்ப துன்பங்களில் அமிழ்த்துதல் |
| அருளல் | - | உயிர்களுக்குப் பாசத்தை நீக்கி அவை சிவத்துவத்தை சார உதவுதல் |

**11. மும்மலங்கள் எவை?**

ஆணவம், கன்மம், மாயை என்பன

**12. பாசம் என்றால் என்ன?**

பாசங்களும், இறைநாட்டம் கொள்ளாத வகையில் உயிர்களைப் பந்தித்து தடுத்துக் கொண்டிருப்பதனால் பாசங்கள் என அழைக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இப்பிறவியிலே செய்யப்படும்வினைகள் எப்பெயர் கொண்டு அழைக்கப் படும்?

ஆகாமியம்

14. அனுபவிக்கும் முன் வினைக்கு என்ன பெயர்?

பிராரத்தம்

15. நாம் அனுபவித்தது போக எஞ்சியிருக்கும் வினை யாது?

சஞ்சிதம்

16. ஆணவம் வலிகெட்ட காலத்தில் செய்யப்படும் வினை யாது?

பற்றற்ற வினை பயன்கருதாமல் கடவுள் சங்கற்பமாய்ச் செய்யப்படும் வினை.

17. பசு என்பதன் பொருள் யாது?

பாசத்தால் கட்டுண்டது

18. பசு வேறு எப்பெயர்கொண்டு அழைக்கப்படும்?

உயிர், ஆன்மா, சிவன்

19. சத்தாக விளங்குவது எது?

பதி

20. அசத்தாக விளங்குவது எது?

பாசம்

21. சதசித்தாக விளங்குவது எது?

பசு (உயிர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. பசுவின் இயல்பு என்ன?

சார்ந்ததைச் சார்ந்த வண்ணம் விளங்கும்

23. சிவதத்துவம் யாது?

நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுவரம். சுத்தவித்தை

24. அந்தக் காரணம் யாது?

மனம், புத்தி, சித்தம், ஓசை. அகங்காரம்

25. தன்மாத்திரை (புலன்) யாவை?

சுவை, ஒளி, ஊறு, ஓசை. நாற்றம்

26. ஸாறி (ஞானேந்திரியம்) யாவை?

மெய், வாய், கண், மூக்கு, செவி.

27. தர்மேந்திரியம் யாவை?

நா, கை, கால், குதம், குதி

சமயா சாரியார் வயது

அப்பருக் கெண்பத்தொன் றருள்வாத வூரருக்குச்
செப்பிய நாலெட்டில் தெய்வீகம் - இப்புவியில்
சுந்தரருக்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க்
கந்தம் பதினா றறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. பொது

01. தோரணம் என்றால் என்ன?
ஒரு நிகழ்வை வெளிப்படுத்தும் அடையாளம்

02. உமக்கு நல்ல வழிகாட்டுவோர் யார்?
பெரியோர்

03. வருடப்பிறப்புக் கொண்டாடப்படும் மாதம் யாது?
சித்திரை

04. தமிழில் தோன்றிய நீதி நூல்கள் 04 தருக?
ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி

05. இந்திரனுடைய யானையின் பெயர் என்ன?
ஐராவதம்

06. மூன்று குருவிகள் உள்ள தோரணம் எச்சந்தர்ப்பதில் கட்டப்படும்?
அமங்கல நிகழ்வுகளில்

07. தமிழில் தோன்றிய நீதி நூல்கள் யாரால் பாடப்பட்டன?

| | | |
|---|---|---|
| ஆத்திசூடி | - | ஔவையார் |
| கொன்றை வேந்தன் | - | ஔவையார் |
| உலகநீதி | - | உலகநாதன் |
| வெற்றி வேற்கை | - | அதிவீரராமபாண்டியன் |
| மூதுரை | - | ஔவையார் |
| நல்வழி | - | ஔவையார் |
| நன்னெறி | - | சிவப்பிரகாச சுவாமிகள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. ஞானக்குறள் அசதிக்கோவை, கல்விஒழுக்கம், நூல்கள் யாரால் பாடப்பட்டது?
ஔவையார்

09. "நால்வர் நான் மணி மாலை" நூலை இயற்றியவர் யார்?
சிவப்பிரகாச சுவாமிகள்

10. அதிவீரராம பாண்டியன் எழுதிய நூல்கள் எத்தனை?
நறுந்தொகை எனும் வெற்றிவேற்கை
நைடதம்
இலிங்கபுராணம்
காசிக்கண்டம், வாயுசங்கிதை, திருக்கருவை அந்தாதி

11. தீயார்க்குச் செய்த உபகாரம் எதைப் போன்றது?
நீர் மேல் எழுத்துப் போன்றது

12. முற்காலத்து கல்வி முறையின் பெயர் என்ன?
குருகுலக் கல்வி முறை

13. திருக்குறிப்புத் தொண்டர் செய்த தொண்டு யாது?
சிவனடியார்களின் ஆடைகளைத் தோய்த்துக் கொடுத்தல்

14. இறைவனால் அம்மையே என அழைக்கப்பட்டவர் யார்?
காரைக்கால் அம்மையார்

15. இறந்தவர்க்குச் செய்யும் கடனின் பெயர் யாது?
பிதிர்க்கடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. இந்தியாவில் எத்தலத்தில் தீபவிழா சிறப்பாக நடைபெறும்?
திருவண்ணாமலைத் தலத்தில்

17. இலங்கையில் தான்தோன்றீஸ்வரர் ஆலயங்கள் எங்குள்ளது?
மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையிலும், ஒட்டிசுட்டானிலும்

18. எதையும் எதிர்பாராமல் செய்வதன் பெயர் யாது?
தொண்டு

19. தைப்பொங்கல் யாருடைய திருநாள்?
உழவர்களின்

20. அன்பும் சிவமும் ஒன்றென்று கூறும் நூல் எது?
திருமந்திரம்

21. மங்கல வாத்தியங்கள் எவை?
மேளம், நாதசுரம்

22. பிரம்மாவுக்கு எத்தனை தலைகள்?
04

23. பருந்திடம் புறாவின் உயிரைக் காப்பாற்றிய மன்னன் யார்?
சிபி சக்கரவார்த்தி

24. மனுநீதி கண்ட சோழன் எதற்கு இரங்கினான்?
கன்றை இழந்த தாய்ப்பசுவிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. அன்பு என்பதன் மறுபெயர் யாது?
நேயம்

27. ஒருவருக்குச் சிறந்த அணியாக விளங்குவது எது என வள்ளுவர் கூறுகின்றார்.
பணிவுடமை, இன்சொல் பேசுதல்

28. போர்த்தேங்காய் அடித்து விளையாடும் தினம் யாது?
சித்திரை வருடப்பிறப்பு

29. திருக்குறள் எத்தனை குறப்பாட்களைக் கொண்டது?
1330

30. ஈழத்துச்சிதம்பரம் என சிறப்பிக்கும் தலம் எது?
காரை நகர் சிவன் கோவில்

31. எமது சமயப்பயிற்சி சாதனை என்பவற்றை தொடங்கி நிகழ்த்துவதற்குரிய இடம் எது?
வீடு

32. மாசி மக தினத்தன்று 5 தேர்கள் பவனி வரும் ஆலயம் எது?
மாத்தளை முத்துமாரி அம்மன்

33. இலங்கையில் இந்து சமய வளர்ச்சிக்காக இன்றும் பணியாற்றி வரும் பெண் யார்?
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

34. பாடசாலையில் கொண்டாடப்படும் சமய விழாக்கள் தருக?
நவராத்திரி விழா, சிவராத்திரி விழா, குருபூசைத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. சமய குரவர் நால்வருக்கும் ஏனைய நாயன்மார்க்கும் காலத்தினால் முற்பட்டவர் யார்?

காரைக்கால் அம்மையார்

36. காரைக்கால் அம்மையார் பாடிய பிரபந்தங்கள் 02 தருக?

அற்புதத்திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை

37. காரைக்கால் அம்மையாரின் இளமைப்பெயர் யாது?

புனிதவதியார்

38. பஞ்சபூதங்கள் எவை?

நிலம், நீர், வாயு, ஆகாயம், அக்கினி

39. பஞ்சபூதத்தலங்களுள் அக்கினித் தலம் எது?

திருவண்ணாமலை

40. சைவப்பண்புகள் எவை?

இனிமையாகப் பேசுதல், அன்பாய் பேசுதல், உண்மை பேசுதல்

41. தமிழ் மறை எனப் போற்றப்படுவது எது?

திருக்குறள்

42. "இந்தச் சரீரம் எமக்குக் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" எனக் கூறியவர் யார்?

ஆறுமுக நாவலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. விரதம் என்றால் என்ன?

மனம் பொறிவழிப் போகாது நிற்றல் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம் வாக்கு காயம் எனும் மூன்றினாலும் இறைவனை மெய்யன்போடு வழிபடல் ஆகும்.

44. தமிழ்ப்புத்தாண்டு பிறப்பு எப்போது கொண்டாடப் படுகின்றது?

மேடராசியில் சூரியன் பிரவேசிக்கும் போது

45. உத்தராயன காலப்பகுதி யாது?

தை மாதம் முதல் ஆனி மாதம் வரை சூரியன் வடக்கு நோக்கி செல்கின்ற காலப்பகுதி

46. உலகில் வாழும் உயிர்களுக்குத் தொண்டுசெய்வதைக் காட்டிலும் மேலான அறம் எதுவுமில்லை எனக் கூறியவர் யார்?

சுவாமி விவேகானந்தர்

47. சுவாமி விபுலானந்தரின் மாபெரும் படைப்பாகிய நூல் எது?

யாழ் நூல்

48. பிரபோதசைதன்னியர் என அழைக்கப்பட்டவர் யார்?

சுவாமி விபுலாநந்தர்

49. கண்ணப்ப நாயனார் வழிப்பட்ட இறைவன் பெயர் என்ன?

திருக்களத்தி நாதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50. முல்லைத்தீவு வற்றாப்பளை அம்மன் கோயில் பொங்கல் எப்போது நடைபெறும்?
வைகாசி விசாகத்தன்று

51. குறுமுனி என அழைக்கப்பட்டவர் யார்?
அகத்தியர்

52. மாகேஸ்வர பூசை என அழைக்கப்படுவது யாது?
அன்னதானம் (சிவனடியார்களுக்கு செய்யப்படுவது)

53. இந்திரனைச் சிறையில் அடைத்தவர் யார்?
சூரபத்மன்

54. பஞ்சமாபாதங்கள் எவை?
உயிர்களைக் கொல்லுதல், பிறபொருளை அபகரித்தல், மது அருந்துதல், புலாலுண்ணுதல், பொய் பேசுதல்

55. சைவ சமயம் என்பதன் கருத்து யாது?
சிவத்தை அடையச்செய்யும் சமயம் என்பதாகும்

56. மனுநீதி கண்ட சோழனின் மகன் யார்?
வரராம தேவன்

57. "அரிது அரிது மானுடராதல் அரிது" எனக் கூறியவர் யார்?
ஔவையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

58. **“திருவுங் கல்வியும் சீரும் தழைக்கவும்” என்னும் பாடல் யாரால் பாடப்பட்டது? எப்புராணத்திலுள்ளது?**
ஞானக்கூத்தர் எனும் துறவியால் பாடப்பட்டது விருத்தாசல புராணத்திலுள்ளது.

59. **நூறு குறள் வெண்பாக்களைக் கொண்ட சாத்திர நூல் எது?**
திருவருட்பயன்

60. **இறைவனுக்கு உள்ளத்திலே கோயில் கட்டிய அடியார் யார்?**
பூசலார் நாயனார்

61. **திருக்குறளின் மறு பெயர்கள் தருக?**
பொதுமறை வாயுறை வாழ்த்து, பொய்யா மொழி, உத்தர வேதம், தமிழ் மறை, முப்பா நூல்

62. **அபரக்கிரியைகள் எவை?**
அந்தியேட்டி, சபண்டீகரணம், சிரார்த்தம், மாசிகம்

63. **பட்டினத்தடிகளின் பிள்ளைத் திருநாமம் யாது?**
திருவெண்காடர்

64. **இறந்த தாய் தந்தையின் ஆத்ம சாந்திக்காக அனுட்டிக்கும் விரதங்கள் எவை?**
இறந்த தாய்க்காக பௌர்ணமி விரதமும், இறந்த தந்தைக்காக அமாவாசை விரதமும்.

65. **நால் வகைப் புருடார்த்தங்கள் எவை?**
அறம், பொருள், இன்பம், வீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**66. இலங்கையில் சிறப்படைந்திருக்கும் அம்பாள் ஆலயங்கள் எவை?**

மாத்தளை முத்துமாரியம்மன், திருமலை பத்திரகாளி அம்மன், நயினை நாகபூசணி அம்மன், தெல்லிப்பளை துர்க்கா தேவி அம்மன், வற்றப்பளை கண்ணகை அம்மன்.

**67. ஆய கலைகள் எத்தனை?**

64

**68. பூ என்ற சொல்லின் பொருள் யாது?**

மலர்ச்சி, பொலிவு

**69. திருக்குறிப்புத் தொண்டரின் பெயர் என்ன?**

ஏகாலியர்

**70. திருக்கடவூர் கோயிலுள்ள இறைவன், இறைவி பெயர் யாது?**

இறைவன் - அமிர்தகடேசுவரர்

இறைவி - ஸ்ரீ அபிராமி

**71. தஞ்சைப் பெருங்கோயிலைக் கட்டுவித்தவர் யார்?**

இராஜ ராஜ சோழன்

**72. எமது உள்ளங்களில் எப்படியான தீபங்களை ஏற்ற வேண்டும்?**

அன்பு, கருணை

**73. ஆலயங்களில் சொக்கப்பானை எத்தினத்தில் கொழுத்தப்படும?**

கார்த்திகை தீபதினத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74. திருவண்ணாமலைத் திருத்தலம் எந்த நாட்டில் அமைந்துள்ளது?
இந்தியாவில்

75. தானங்களில் சிறந்தது எது?
வித்தியா தானம்

76. அக்காலத்தில் வழங்கப்பட்ட கல்வியில் எது முக்கியமானதாக கருதப்பட்டது?
ஒழுக்கம்

77. நீரினால் விளக்கேற்றிய அடியார் யார்?
நமி நந்தி அடிகள்

78. சங்கத் தமிழ் மூன்றும் எவை?
இயல், இசை, நாடகம்

79. செய்ந்நன்றி மறத்தலால் ஏற்படும் தீமையைக் கூறும் புராணம்?
கந்தபுராணம்

80. ஆறுமுக நாவலர் பிறந்த ஆண்டு, மாதம் திகதி எது?
1822ம் ஆண்டு, மார்கழி மாதம், 18ம் திகதி

81. யாழ்ப்பாணத்தில் நாவலர் நிறுவிய பாடசாலை எது?
சைவப்பிரகாச வித்தியா சாலை

82. 5ம் குரவர் எனப் போற்றபப்டுபவர் யார்?
நாவலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

83. பசுவதைக்கு அஞ்சி இந்தியா தமிழகம் சென்ற இலங்கையர் யார்?
ஞானப்பிரகாசர்

84. வசன நடைக்குத் தந்தை எனப் போற்றப்பட்டவர் யார்?
ஆறுமுக நாவலர்

85. சண்டேசுவரரைத் தரிசித்து எத்தனை முறை கைகொட்ட வேண்டும்?
3 முறை

86. "அறம் செய்ய விரும்பு" என வலியுறுத்தும் நூல்?
ஆத்திசூடி

87. இன்னா செய்தாரை எவ்வாறு ஒறுத்தல் வேண்டும் என்று வள்ளுவர் கூறுகின்றார்?
அவர் நாண நன்னயம் செய்தல்

88. நூலோர் தொகுத்தவற்றுள் சிறந்த செயல் எது என வள்ளுவர் கூறுகின்றார்?
பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்

89. எழுத்தக்கள் எல்லாம் எந்த எழுத்தின் ஒலியை முதலாகக் கொண்டுள்ளது?
அகரம்

90. இப்பிறப்பில் நாம் கற்கும் கல்வி எத்தனை பிறப்புக்குத் தொடரும்?
ஏழு பிறப்புகளு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**91. உலகத்தில் மிகப் பெரியதாக வள்ளுவர் கருதுவது எது?**

காலத்தினால் செய்த நன்றி

**92. இந்திரன் ஆட்சி செய்யும் நகருக்கு என்ன பெயர்?**

அமராவதி

**93. சிவனடியார்களுக்கு அமுது செய்வித்து உயர்வடைந்த அன்பர் யார்?**

இளையான்குடி மாறன்

**94. யோகர் சுவாமியின் குரு பூசைத் தினம் எது?**

பங்குனி ஆயிலியம்

**95. தீபத்தொண்டில் முத்தியடைந்த நாயனார் யார்?**

நமிநந்தி அடிகள், கணம்புலலர் நாயனார்

**96. இராம கிருஸ்ணரின் முதல் சீடர் யார்?**

சாரதா மணி அம்மை

**97. பண்டார மும்மணிக் கோவை எனும் நூலைப்பாடியவர் யார்?**

குமரகுருபரர்

**98. கூன் பாண்டியனின் முதலமைச்சர் யார்?**

குலச்சிறை நாயனார்

**99. நன்றிக்கு எது வித்தாக விளங்குகின்றது என வள்ளுவர் கூறுகின்றார்?**

நல்லொழுக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**100. காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே என்று எழுதி வைத்து மறைந்தவர் யார்?**

மருதவாணர் (பட்டினத்தடிகள்)

**101. விவேகாநந்தர் பிறந்த ஆண்டு எது?**

1863

**102. சைவ போதம் முதற் புத்தகத்தின் ஆசிரியர் யார்?**

சிவபாத சுந்தரனார்

**103. பட்டினத்தாரின் மனைவி பெயர் யாது?**

சிவகலை

**104. "தன்வினை தன்னைச்சுடும் ஓட்டப்பம் வீட்டைச் சுடும்" என்று கூறியவர் யார்?**

பட்டினத்தடிகள்

**105. முக்குணங்கள் எவை?**

சாத்வீகம், இராஜதம், தாமதம்

**106. சோம்பலும் சோர்வும் தரும் குணம் எது?**

தாமதம்

**107. சாந்தமும் அமைதியும் உடைய குணம் எது?**

சாத்வீகம்

**108. எந்த மாதத்தில் வரும் மகாளயபட்சத்தில் பிதிர்களுக்குக் கடன் செய்யக் கூடியது?**

புரட்டாதி மாதத்தில்

**109. தட்சிணாயன காலப்பகுதி தொடங்கும் மாதம் யாது?**

ஆடி மாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

110. கிருஷ்ணபட்சத்துக்கு வேறு பெயர்கள் எவை?
அபரபக்கம், தேய்பிறை

111. அமாவாசைக்கு அடுத்தநாள் வரும் திதிக்கு என்ன பெயர்?
பிரதமை

112. ஒரு நாள் எத்தனை நாழிகை கொண்டது?
60

113. கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஆச்சிரமத்தின் பெயர் என்ன?
மகாதேவ ஆச்சிரமம்

114. திருநெறிக்கழகம் எத்தனையாம் வருடம் யாரால் ஆரம்பிக்கப்பட்டது?
1952ம் வருடம் திரு.க.நல்லதம்பியால்

115. திருநெறிக்கழகம் என பெயர் சூட்டியவர் யார்?
வணக்கத்துக்குரிய சுத்தானத்த பாரதியார்

116. கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமம் எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?
1955ம் ஆண்டு

117. மகாதேவ ஆச்சிரமத்தின் முதற்குரு யார்?
வடிவேல் சுவாமிகள்

118. மகாதேவ ஆச்சிரமத்தின் தற்போதைய குரு யார்?
கணேசாநந்த மகாதேவ சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

119. சைவவித்தியா விருத்திச்சங்கம் ஆரம்பித்த ஆண்டு எது?

1923 ம் ஆண்டு

120. நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தின் தீர்த்தம் எது?

சித்தாமிர்த புட்கரணி

121. பறாளை விநாயகர் ஆலயம் எங்குள்ளது?

யாழ்ப்பாணம் சுழிபுரத்தில்

122. ஏர் மங்கலம் என்றால் என்ன?

உழவன் முதன்முதலில் உழவு ஆரம்பிப்பது

123. இருபத்தேழு நட்சத்திரத்தில் பூசம் எத்தனையாம் நட்சத்திரம்?

8 வது

124. பூச நட்சத்திரத்தின் தேவதை யார்?

பிரகஸ்பதி

125. தேவர்களின் குருவின் பெயர் யாது?

பிரகஸ்பதி

126. சூரியன் தனு இராசியிலிருந்து மகர இராசிக்குப் பிரவேசிக்கும் காலத்தின் பெயர் என்ன?

உத்தராயணம்

127. புராணம் என்பதன் பொருள் எது?

பழமையானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

128. இதிகாசம் என்பதன் பொருள் யாது?

இது இவ்வாறு முன்பு நடந்தது

129. இராவணன் வைத்திருந்த விமானத்துக்கு என்ன பெயர்?

புட்பக விமானம்

130. இறைவன் யமனை உதைத்தமை யாரைக் காப்பாற்றச் செய்யப்பட்டது?

மார்க்கண்டேயரை

132. ஆகாய கங்கையைப் பூமிக்கு கொண்டு வந்தவர் யார்?

பகீரதன்

133. திருவாவடுதுறை ஆதீனத்தின் முதற் குரவர் யார்?

நமசிவாயத் தேசிகர்

133. நற்சிந்தனை நூல் யாருடைய சிந்தனை?

யோகர் சுவாமிகளது

134. சைவசமையத்தின் பிரமாண நூலாகவும் சிறப்பு நூலாகவும் கொள்ளப்படுவது எது?

ஆகமம்

135. சிவாமங்களின் கருத்துக்களை தமிழில் விளக்கும் நூல் எது?

திருமந்திரம்

136. மகாபாரதத்தை தமிழில் பாடியவர் யார்?

வில்லிபுத்தூர் ஆழ்வார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

137. பொலநறுவையில் இராஜ ராஜ சோழ மன்னனின் மனைவி பெயரில் அமைக்கப்பட்ட ஆலயத்தின் பெயர் யாது?

வானவன் மாதேவி ஈச்சரம்

138. ஆறுமுக நாவலரின் முதற் பிரசங்கம் நடைபெற்ற கோயில் எது?

வண்ணார் பண்ணை சிவன் கோவில்

139. ஆறுமுக நாவலர் நிறுவிய முதற் பாடசாலையின் பெயர் யாது?

சைவப்பிரகாச வித்தியாலயம்

140. பராபரக்கன்னி மாலை யாரால் பாடப்பட்டது?

தாயுமானவரால்

141. கோயில் கட்டிடச் சிறப்புத் தொழில் நுட்பக் கலைஞனை எவ்வாறு அழைப்பர்?

ஸ்தபதி

142. வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் மூலஸ்தானத்திலுள்ள சுரூபம் எது?

சக்கரம்

143. உத்தரக்கிரியை என்று எக்கிரியையைக் குறிப்பிடுவர்?

மரணக்கிரியை

144. நடுகல் வழிபாடு எக்காலத்தில் நிலவியது?

சங்ககாலத்தில்

145. குலிசபாணி என்று அழைக்கப்படுவர் யார்?

இந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தில் உள்ள பிரகாரங்களில் பிரதட்சனம் செய்வதால் உண்டாகும் பலன்.

| | | |
|---|---|---|
| காலையில் வலம் வருதல் | - | நோய் நீங்குதல் |
| பகலில் வலம் வருதல் | - | விருப்பம் அளிக்கும் |
| மாலையில் வலம் வலுதல் | - | எல்லாப் பாசத்தையும் அகற்றும். |
| அர்த்த சாமத்தில் வலம் வருதல்- | | மோட்ச சித்தி உண்டாகும் |

## வெள்ளி செவ்வாய்

வெள்ளிக்கிழமை பணம் கொடுத்தல் கூடாது. அரிசி புடைத்தல் கூடாது, செவ்வாய்க்கிழமை கடனை திருப்பிக் கொடுத்தால் கடனே இல்லாமல் வாழலாம்.

ஐயோ என்ற வார்த்தையை வீட்டில் உள்ளவர்கள் கூறக்கூடாது.

செவ்வாய், வெள்ளி உப்பு நீரால் துடைக்க தீட்டு தோசம் நீங்கும்.

விளக்கேற்றிய பின் கொடுக்கக் கூடாதவை: மோர், பணம், சுண்ணாம்பு, எண்ணெய்.

## கடன் நீங்க

பசுமாட்டுச் சாணத்தில் செய்த விளக்கில் ஏழு வெள்ளிக் கிழமைகளில் நெய்தீபம் ஏத்திவர கடன் பிரச்சனை தீரும்.

உப்பும், கடுகும் வீட்டின் தரையில் சிந்தினால் தரித்திரம்

இறந்தவர் சவ ஊர்வலம் எதிரில் வந்தால் நல்ல சுகம்

## வாஸ்து தோஷம் நீங்க

சுவர்ண அலங்காரம் செய்யப்பட்ட வெங்கடாஜலபதி படத்தை வாசலுக்கு நேர்எதிரே மாட்டி வைத்திட வாஸ்த்து தோஷம் நிவர்த்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



















நீண்ட வரலாறு கொண்ட சைவத் தமிழ் மரபில் உதித்த செல்வன் ஜெயமாருதி பள்ளிச் செயற்பாட்டிலும், பல துறைகளிலும் சாதனை படைத்தவர். அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்காக வருடா வருடம் நடாத்தப்பட்ட 2007ம் ஆண்டு 9ம் வகுப்புப் பரீட்சையில் தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றவர்.

சிறுவயதிலேயே பல சிறந்த ஆக்கத்தை செய்துவரும் இவரது ஆக்க முயற்சி எமது சமூகத்திற்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

**திரு.கி.சின்னராசா**
பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்)
வலயக்கல்விப் பணிமனை
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org